உ

செட்டிநாடு

வார இதழ்

மலர்-25 இதழ்-1

மன்மத-ஐப்பசி-3

வியாழன் வெளியீடு

தேவகோட்டை

ஆண்டுச்சந்தா ரூ 4

வெளிநாடு ரூ 7

ஆசிரியர்:- பாலகவி இராமநாதன்செட்டியார்



திருச்சிற்றம்பலம்

தன்னடைந்தார்க் கின்பங்கள் தருவானைத் தத்துவனைக்
கன்னடைந்த மதிற்பிரம புரத்துறையுங் காவலனை
முன்னடைந்தான் சம்பந்தன் மொழிபத்து மிவைவல்லார்
பொன்னடைந்தார் போகங்கள் பலவடைந்தார் புண்ணியரே

திருச்சிற்றம்பலம்

பசுந்தமிழ் மலர்

பாலகவி

ஒடுங்கீ ரோதி யொண்ணுதற் குறுமகள்
நறுந்தண் ணீர ளாரணங் கினளே
இனைய ளென்றவட் புனையள வறியேன்
சில்மெல் லியவே கிளவி
அணைமெல் லியள்யான் முயங்குங் காலே

:-குறுந்தொகை 70

உறை:- 'ஒடு ங்கு - ஒடுங்கிய, ஈர் ஓதி-இரண்டாகவகிர்ந்த கூந்தலையும், ஒள் நுதல் - ஒள்ளிய நுதலையும் உடைய,' குறு மகள்- இளமகளாகிய தலைவி, நறும் - நன்மணத்தையுடைய, தண்-குளிர்ச்சிபொருந்திய, நீரள்-நீரின் தன்மையினள், ஆர்அணங்கினள்-பிரிவுக் காலத்தில் பெரு வருத்தத்தைத் தருபவள், அவள்-அவளை, இனையள் என்று - இப்படிப்பட்டவளென்று, புனை அளவு- புனைந்து கூறும் எல்லையை, அறியேன்-நான் அறியமாட்டேன், கிளவி-அவளது சொற்கள், சில-சிலவாகவும், மெல்லிய-மென்மையைஉடையனவாகவும் உள்ளன, யான் முயங்குங்கால்-நான் அவளைக் கூடுகின்றபொழுது, அணை-பஞ்சணையைப்போன்ற, மெல்லியள்—மென்மைத் தன்மையை உடையவளாயிருக்கின்றாள்' என்பதாகும்.

அகத்திணை பற்றிக் கூறும் சங்க இலக்கியங்களுள் ஒன்றாகிய குறுந்தொகையில், ஓரம் போகியார் என்னும் புலவர் பெருமானால் இயற்றப்பெற்றது இச்செய்யுள். இந்நூலில் இவரியற்றியனவாக இன்னும் நான்கு செய்யுட்கள் உள்ளன. அவை முறையே 10, 122, 127, 384 என்னும் எண்கள்பெற்ற பாடல்களாகும்.

பரத்தையிற் பிரிந்த தலைவன் மீண்டு வந்து வாயில் வேண்டிய விடத்துத் தோழி தலைவியின்

...ற்பொழுக்கத்தைச் சிறப்பிப்பதும், தலைவனது பிரிவுக் காலத்தில் மாலைப்பொழுது கண்டு தலைவி கூறுவதும், தலைவியின்பால் பாணனைத் தலைவன் தூதுவிட்டுத் தான் பின்னே நிற்ப அவனை நோக்கித் தோழி சொல்லுவதும், பரத்தையிடமிருந்து வந்த தலைவனுக்குத் தோழி வாயில் மறுப்பதுமாகிய பொருள்களையுடைய அச்செய்யுட்கள் நான்கில் தோழி கூற்றாயமைந்தன மூன்று செய்யுட்களாம். மற்றை ஒன்று தலைவியின் கூற்று.

மேலே கண்டபாடல் தலைவன் கூற்றாயமைந்தது. தலைவியிடம் இன்பம் நுகர்ந்து அவளை நீங்கும் தலைவன், தன் நெஞ்சை நோக்கிக் கூறி மகிழும் பொருளையுடையது இது. புணர்ச்சியின் மகிழ்தலும், நலம் பாராட்டலுமாகிய இரண்டு துறைகளையும்விடத் தலைவனது உள்ளக்கிடக்கையை அவன் நெஞ்சோடு சொல்லி மகிழுதலாகிய இந்தத் துறையே உண்மையைத் தெளிவுபடுத்தி நிற்பதாகும்.

ஓரம்போகியார் என்னும் இப்பாடலின் ஆசிரியர் சங்க இலக்கியங்களுள் மற்றொன்றாகிய ஐங்குறுநூற்றில், மருதத்தைப் பற்றிக் கூறும் நூறு பாடல்களையும் இயற்றியவர். இவரியற்றியனவாக நற்றிணையில் இரண்டு பாடல்களும் புறநானூற்றில் ஒரு பாடலும் காணப்பெறுகின்றன. மருதத் திணையை விரித்து உள்ளுறையுவமம், இறைச்சி முதலியவற்றை அமைத்துத் தெளிவுபடக் கூறுகின்ற ஆற்றல் இவருக்கு உண்டு. தமிழ்நாட்டு முடியுடை வேந்தர் மூவராலும் பிற செல்வர்களாலும் நன்கு மதிக்கப்பெற்றவர் இவர்.

அகவொழுக்கம் பற்றிப் பாடுதலில் வல்லவராகிய இவர், இப்பாடலில் தலைவன் தலைவியிடம் பெற்ற இன்பத்தை நினைந்து மகிழுவதை நயம்பட எடுத்துக்கூறுகின்றார். இயற்கையின் உண்மைகளை நன்குணர்ந்து பாடிய நமது பண்டைப்புலவர்கள், ஐந்திணை ஒழுக்கங்களாகிய உரிப்பொருள்களை வெளிப்படுத்துமுறை மிக இனிமை பயப்பதாகும்.

ஒத்த அன்பாற்கூடும் தலைவனும் தலைவியுமாகிய இருவருக்குமிடையே நிகழும் நிகழ்ச்சிகள் உயர்ந்த நிலையை உடையன. அவர்களை ஒன்றுபடுத்திய அன்பு,

பிறவிதோறும் தொடர்ந்து வந்த ஒன்ருகும். அதனுலேயே 'பயிலி யது கெழீஇய நட்பு' என்று இக்காதலைக் கூறுவர். பிறவி தோறும் கணவனும் மனைவியுமாக இருப்பதே இவ்வன்பின் பயனுகும். 'இம்மைமாறி மறுமை யாயினும், நீயாகியரெங் கணவனை, யானு கியர்நின் னெஞ்சு நேர்பவளே' என்னும் அம்மூவனுர் வாக்காகிய தலைவிகூற்று இங்கே நினைவு கூரத்தக்கதாகும்.

இவ்வாறு பிறவிதோறும் தொடர்ந்து வருகின்ற அன்பை உடையாராய்த் தலைவனும் தலைவியும் ஒன்றுபடுதற்குக் காரணமாயிருப்பது நல்லூழாகும். அவ்வூழை ஊட்டுவது ஆண்டவன் செயல். களவிற் புணருந் தலைவனுந் தலைவியும் இளமைதொட்டு நட்புப்பூண்டு ஒழுகியவரல்லர். ஊழின் வலி, பிறவிதோறுந் தொடர்ந்து வருகின்ற அன்பை அடிப்படையாகக் கொண்டு அவர்களை இணைத்து வைத்தது. கண்டதும் காதலைத் தந்த அவ்வன்பு, அவர்களுக்கு அப்பொழுது உண்டானதன்று. பருவம் வந்த தாமரைமுகை கதிரவனைக் கண்டதும் மலர்வது போன்று, காதலர்கள்பால் தக்க செவ்வி உண்டாகும்போது அது மலர்ந்தது.

இதனை 'காமங் காம மென்ப காமம் அணங்கும் பிணியுமன்றே நுணங்கிக், கடுத்தலுந் தணிதலுமின்றே யானை, குளகு மென்ருண் மதம் போலபாணியுமுடைத்தது காணு நர்ப் பெறினே' என்ற குறுந்தொகைப் பாடலால் அறியலாம். பிறவிதோறும் தொடர்ந்து வருகின்ற அவ்வன்பு மிகப்பழையதேயாயினும், தோன்றும்பொழுதுகளிலெல்லாம் புதிதுபுதிதான இன்பத்தைத் தருகின்ற ஆற்றல் அதற்கு உண்டு. அதனுலேயே அதனை நிலத்திற் பெரியதாக-வானில் உயர்ந்ததாக-நீரில் ஆழமானதாகப் பெரியோர் கூறினர்.

'விருந்தே காமம் பெருந்தோளேயே' என்ற குறுந்தொகைப் பாங்கன் கூற்றும், 'அறிதோறறியாமை கண்டற்ருல் காமம்' என்ற திருக்குறள் தலைவன் கூற்றும், புணருந்தோறும் பெரும் போகம் பின்னும் புதிதாய், மணந்தாழ் புரிகுழலாள் அல்குல் போல வளர்கின்றதே' என்ற திருச்சிற்றம்பலக் கோவைத் தலைவன் கூற்றும் இங்கே நினைவு கொள்ளத்தக்கன.

அகமும் புறமும் ஒத்த அன்பினாற் கூடிய காதலர்கள், பலகாற் பயின்ற பழமையை உடையவர்களாயினும் அவர்களிடையே பொருந்திய அன்பு நாளும் புதியதாக விளங்கி இன்புறுத்துமென்றால், புதியவர்களாகக் கூடிய காதலர்களிடையே முகிழ்த்த அன்புச் சிறப்பைஅளவிட்டுச்சொல்ல முடியுமா?

உயிர்கள், இன்பம் நுகருதற்குரிய வாயில்களாக உடம்பில் அமைந்திருப்பவை புலன்கள். கண்ணும் காதும் மூக்கும்வாயும் மெய்யுமாகிய ஐம் புலன்களையும் பெற்று எல்லாவகையான இன்பங்களையும் அடையும் பேறு பெற்றவர், மக்கட்பிறவியைப் பெற்றவர். இன்பப்பொருள்களில் எல்லாப் புலன்களுக்கும் ஒருசேர இன்பந்தருபவர் பெண்மக்களே யாவர். 'கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியுமைம் புலனு, மொண்டொடி கண்ணேயுள' என்பது பொதுமறை.

ஒடுங்கிப் படிந்து அழகாய் அமைகின்ற இயல்பு, இளம் பெண்களுடைய கூந்தலுக்கே உரியது. இடத்திலும், வலத்திலும் ஒரே அளவில் நிற்கும்படி வகிரப்பெற்ற கூந்தலும், ஒள்ளிய நுதலும் தலைவியினது ஆண்டிற்குறிய இளமையைப் புலப்படுத்திக் காட்சியின்பத்தை நல்கின. அவள்பால் அமைந்த நறுமணம் உயிர்ப்பின்பத்தை அளித்தது. அவளுக்கு உள்ள தண்ணீரின் தன்மை சுவையின்பத்தை வழங்கியது. அவளது சில மெல்லிய சொற்கள் கேள்வியின்பத்தைக் கொடுத்தன. அவளது உடலிலமைந்த பஞ்சணை போன்ற மென்மைத்தன்மை ஊற்றின்பத்தை உதவியது.

முயக்கவேளையில் குறுமகளாக இருந்து பெரிய இன்பத்தை வழங்குகின்றவளாயினும், பிரிவு வேளையில் பேரணங்காக நின்று வருத்துவாளென்று தலைவன் நெஞ்சோடு சொல்லிக்கொள்வதிலிருந்து, அவனது பிரிவாற்றாமைத் துன்பம் நன்கு புலப்படுகின்றதல்லவா? 'நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந், தீயாண்டுப் பெற்றாளிவள்' என்ற திருக்குறளை இதனோடு ஒப்பிட்டுப்பார்க்கலாம்.

சின்மையும் மென்மையுமாகிய பண்புகள் பெண்மக்களது சொற்களுக்கு இன்றியமையாதன என்பது முதலாகிய இன்னும் பல கருத்துகளை இப்பாடல் புலப்படுத்திக்கொண்டிருக்கிறது.

சைவாலயங்களில் சம்ஸ்கிருத அர்ச்சனையே வேண்டும்.

சித்தாந்த பண்டித பூஷணம் ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை

(முன்தொடர்ச்சி)

அதன் நோக்கம் யாதோ? ஆனால் பக்தியை யுண்டாக்கவே அச்சட்டந் தோன்றியதெனப் பிரசாரங்கள் நிகழ்ந்தன. அப்பிரவேசமு மாயிற்று. பக்தியும் உண்டாகித்தானிருக்கும். ஆனால் அஃதுண்டாகவில்லையென இப்போது நவீனர் குறை கூறுகின்றனர். அச்சட்டம் கருதிய பயனைத் தரவில்லை யென்பது அவர் கூற்றால் அனுமிக்கப் படும். ஆனால் அவரும் அப்பக்திப் பிரசங்கத்தையே முன் வைத்துத் தமிழர்ச்சனைக்குக் கூச்சலிடுகின்றனர். அவ்வர்ச்சனை மாத்திரம் பக்தியை யுண்டாக்கிவிடுமா? ஆமெனின், அஃதெதனாற் புலப்படுகிறது? ஆலயப் பிரவேசந் தோல்வியில் முடிந்ததென அவர் சொல்லாமற் சொல்கின்றனர். தமிழர்ச்சனைப் பிரவேசஞ் சித்திக்குமானால் அது தோல்வியிலேயே முடியுமென நான் நேராகவே சொல்லுகிறேன்.

9. 'ஒலிக்குச் சக்தி உண்டு என்றால் அது தமிழ் ஒலிக்கும் உண்டு' (16-6-55 தமிழ்நாடு) என்கிறார் நவீனர். ஒலிக்குச் சக்தியுண்டென்பது உண்மையாயின் அச்சக்தி தமிழொலிக்குமில்லையெனக் கூறி அவ்வளவில் அவர் மகிழ்கிறார். ஆனால் ஒலிக்குச் சக்தி உண்டு அல்லது இல்லை யென்பது பற்றி அவரே ஆராய்ந்து முடிவு கண்டதாகத் தெரியவில்லை. தமிழொலிக்குச் சக்தியுண்டென்பது முதலில் ஸ்திரமாக வேண்டும்; அது கொண்டு பொதுவாக ஒலிக்குச் சக்தியுண்டென்பதைப் பிறகுதான் அவர் ஒத்துக்கொள்வர். நயம் என்பதெதுவுந் தமிழுக்குத்தானுரியது, அம்மொழியிற் காணப்படாத நயம் வேறெம்மொழியிலுமே கிடையாது எனக்கூறுவது அவருக்கு வெகு திருப்தி. ஆகலின் தமிழொலிக்கும் சக்தியுண்டென அவர் கூறத்தான் செய்வர். 'நிறைமொழிமாந்தர்

கள்...கண்ட மந்திரங்கள் ஒலியாற்றல் வடமொழிக்கும்உண்டு. தமிழுக்கும் உண்டு' (16-6-55 தமிழ்நாடு) என்றும் அவர் சொல்கிறூர். அம்மாந்தரின், மந்திரங்களின் விஷயத்தை என் புத்தகத்திற் காண்க. சக்தியுண்டென மேலே சொன்ன ஒலியும் மந்திரங்களின் ஒலிதான் போலும். அங்ஙனமாயின் மந்திரங்களின் ஒலியாற்றல் மந்திரங்களுக்கேயுண்டு. சம்ஸ்கிருதத்துக்குந் தமிழுக்கும் எப்படியுண்டு? அவற்றிற்கும் உண்டெனின், தெலுங்கு, ஹிந்தி, ஆங்கிலம், இலத்தீன், ஹீப்ரு, கிரேக்கம் முதலியமற்றமொழிகளுக்கும் உண்டா? இல்லையா? இல்லையென்று சொல்ல அவரால் முடியாது. சொன்னுல் அம்மொழிகளுக்குரியார் அவரைச் சும்மா விடார். உண்டென்று சொன்னுல் அவ்வாற்றல் எல்லாமொழிகளுக்கும் பொதுவென்ருகும். அதனுல் தமிழுக்குத் தனிச்சிறப்பில்லை, அவ்வாற்றல் எல்லா மொழிகளுக்கும் உண்டென அவர் சொல்லியுமிருக்கிறூர். 'எழுகின்ற இதய பாவமே மந்திரமாகும்' (16-6-55 தமிழ்நாடு) என்றது காண்க. எழுவது இதயமோ, பாவமோ, எதுவேனுமாக. ஒவ்வொரு மொழிக்குமுரிய இதயங்கள் பல்கோடி. ஒவ்வோரிதயத்தின் பாவங்களும் அங்ஙனமே. அன்றியும் அவையெல்லாம் மந்திரங்களா? என்னே மந்திர லக்ஷணம்! அதுகிடக்க, ஆற்றலுடையதெனச் சொல்லப்பட்டது மந்திரங்களின் ஒலியே. சம்ஸ்கிருதம், தமிழ்முதலியவெல்லாம் பாஷைகள். மந்திரங்கள் வேறு பாஷைகள் வேறு. மந்திரங்களின் ஒலி வேறு, அவையல்லாதமற்றைச் சம்ஸ்கிருதச்சொற்களின் ஒலியும், தமிழ் முதலிய பிறமொழிகளிலுள்ள எல்லாச் சொற்களின் ஒலியும் வேறு. ஆகலின் மந்திரங்களின் ஒலியாற்றல் மற்றைச் சொற்களில் இருக்க முடியாது. ஒன்றன் ஆற்றல் அதற்கேயுரியது. அஃதின்னென்றில் இருப்பதில்லை. அங்ஙனமாக, அவர் மந்திரங்களையும் மற்றைச்சொற்களையுங் குழப்பித் தமிழைச் சம்ஸ்கிருதத்தோடு ஒட்டவைத்து அம்மந்திரங்களின் ஒலியாற்றல் தமிழுக்குமுண்டென இல்லாதுகூறி ஏழைமக்களை ஏய்க்கின்றனர். அவர் காட்டும் ஆதாரங்களோ வெறும் போலிகளே.

(தொடரும்)

உ
சிவமயம்
பாலருவாயர் துணை



அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

செட்டிநாடு

மன்மத ஐப்பசி 3

புத்தாண்டும் புத்தக வடிவமும்

நமது "செட்டிநாடு" வார இதழ் தோன்றி இருபத்துநான்கு ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. ஐப்பசியிலிருந்து இருபத்தைந்தாவது ஆண்டு வளர்ச்சியைப்பெற்று, மெய்யன்பர்களாகிய உங்களைத் தேடி வாரந்தோறும் வந்துகொண்டிருக்கும். காரைக்குடி திருவாளர் சு. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள் ஆசிரியராய் இருக்க **1930**ம் ஆண்டில் தஞ்சாவூரிலிருந்து செட்டிநாடு முதலிதழ் வெளி வந்தது.

ராஜாசர் அண்ணாமலைசெட்டியாரவர்கள், ஆவி. பழ. சிதம்பரம் செட்டியாரவர்கள் முதலான பெரியோர்கள் செட்டிநாடு வளர்ச்சியில் ஆர்வம்கொண்டு வேண்டிய உதவி புரிந்து வந்தார்கள். செட்டிநாடு பிரிண்டிங் கம்பெனி என்ற பெயருடன் பதிவு செய்யப்பெற்ற கூட்டுறவுத் தாபனம், அச்சகத்தையும் வார இதழையும் நடத்திவந்தது. அந்தத் தாபனத்தின் மேலாளராகப் பதவி வகித்துவந்த ஷை தஞ்சாவூர் இராமநாதன் செட்டியாரவர்கள் தமது சொந்த அலுவல்களின்மிகுதி காரணமாகப் பெரும் பொறுப்பை அப்போதைய அலுவலச் சிப்பந்திகளிடம் ஒப்புவித்ததால் ஷை கம்பெனி, பங்குதார்களின் பங்குத் தொகையளவோடு நில்லாது ஏராள

மான கடனும் வாங்கி விழுங்கியதாக ஆகிவிட்டது.

ஷ கம்பெனியின் பெரிய பங்குதார்கள் இருவரில் ஒருவராக-மிகுதியான கடன் கொடுத்த ஒரேயொருவராக நாமிருந்ததால் கம்பெனிச் சொத்துக்கள் சென்னை உயர்நீதிமன்ற ஆணைப்படி ஏலத்திற்கு வந்தபொழுது, அவற்றைப் பெருந்தொகை கொடுத்து எடுக்க வேண்டியதாகஆயிற்று. அச்சகம் கைக்கு வந்தபிறகு பத்திரிகையை நடத்துவதா நிறுத்துவதா என்பது பற்றி ஆலோசித்துக் கொண்டிருந்தபொழுது பல அன்பர்கள்நடத்த வேண்டுமென்ற கருத்தையே தெரிவித்தார்கள். ஐந்தாண்டுகள் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தியதால் வந்த பயன், அளவுகடந்த நமது உழைப்புக்கு ஏதும் ஊதியம் இல்லாது போனதுமட்டுமின்றி ஆயிரக்கணக்கான ரூபாய் நட்டமாகக் கொடுத்ததுதான் என்பதை இந்த வேளையில் வருத்தத்தோடு சொல்லத்தான் வேண்டியதிருக்கிறது.

என்றாலும், நமது இதழ் அறிஞர்களால் பொன்னேபோற் போற்றப்பட்டு வருவது குறித்து நாமடையும் பெருமிதத்தை அளவிடவே முடியாது. 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச், சான்றோனெனக் கேட்ட தாய்' என்பது திருக்குறள் அல்லவா? அரிய பெரிய கருத்துகளுடன்வெளி வருகின்ற நமது வாரஇதழ், கட்டிடம் செய்து வைத்துக்கொள்ளத் தக்க அழகான அளவில் வந்தால் நல்லது எனப் பல அன்பர்கள் விரும்பியதால் கிரவுன் *1 X 8* அளவுடையதாக இனி வெளிவருமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அன்பர்களின் பேராதரவு எப்பொழுதும் இருக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறோம்.

ஊதியத்தைக் குறிக்கோளாகக் கொள்ளாது தொண்டையே குறிக்கோளாகக்கொண்டு பணியாற்றி வருகிற நமது இதழ் மெய்யன்பர்களின் ஒத்துழைப்பினால் வளர்ச்சி பெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இளையாற்றக்குடி

ஸ்ரீ கைலாசநாத சுவாமி நித்திய கல்யாணி அம்பாள் திருக்கோயில் நவராத்திரி விழாவில் 20, 21, 22-10-55உகளில் வித்துவான் தி. இராமாநுசன், புலவர் தில்லைக் கோவிந்தன், பண்டிதமுத்துவேங்கடாசலம் ஆகியோரது சொற்பொழிவுகளும் 23உ தஞ்சாவூர் லெட்சுமிநாராயணபாகவதர் இசையரங்கும் 24உ குமாரி பத்மவல்லி பரதநாட்டியமும் நடைபெறும்.

காஞ்சிபுரம்

காஞ்சி மெய்கண்டார் கழகத்தினர் ஏகாம்பரநாதர் கோயிலிலுள்ள அருணந்தி சிவாசாரிய சுவாமிகள்சந்நிதியில் 13-10-55-ந்தேதி திருமுறைத் திருமுழுக்கு வழிபாடு செய்தனர். பெருந்திரளாக அன்பர்கள் வழிபாட்டில் கலந்துகொண்டு சிவபுராணக் கூட்டுப் பிரார்த்தனை நடத்தினர். மறுதினம் ஸ்ரீ காமாட்சியம்மையார் திருக்கோயிலில் 'அருணந்தி சிவாசாரியர் புராணச்சொற்பொழிவு' மதுரை ஆதீனப் புலவர் மாமணி திருஞானசம்பந்த முதலியாரவர்களால் நடைபெற்றது. வாழ்த்துடன்விழா இனிது நிறைவெய்தியது.

திருப்பனந்தாள்

ஸ்ரீ ல ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரியின் ஸ்ரீ கந்தவேள் கழகக் கலைமகள்விழா பண்டைத் தமிழ்ப் புலவர் வரலாற்றுச்சொற்பொழிவுகள் நிகழ 16-10-55 முதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முதல்நாளில் ஸ்ரீகாசிமடம் இளவரசு ஸ்ரீ ல ஸ்ரீ மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் தலைவராயிருந்து நல்லுரை கூறினார்கள். தொடர்ந்து அறிஞர்கள் தலைமையில் கல்லூரிமாணவர்கள் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன.

நோட்டீஸ்

தேவகோட்டை சப் கோர்ட்டு
S C 55 of 1955

க. சொ. வள்ளியம்மைஆச்சி
—வாதி

வெ நா ந முத்தையாசெட்டியார்
கல்லல் —2 ம் பிரதிவாதி

வாதிக்கு தாங்கள் ரூ1000க்கு எழுதிக்கொடுத்திருக்கும் புரோநோட்டின் பேரில் அசல் வட்டி வரப்பற்ற ஷை நம்பரில் பிராது செய்து 31-10-55 வாயிதா போடப்பட்டிருக்கிறதுஎன்றவிவரம் அறியவும்.

A. சுந்தரமய்யர்
தேவகோட்டை } அட்வகேட்
10-10-55

தேவகோட்டை

தேவகோட்டை நகரசபைத் தேர்தல் 10-10-55ம் தேதி 14 தொகுதிகளில் 16 இடங்களுக்கு நடைபெற்றது. இந்நகரசபைக்குள்ள 20 இடங்களுக்கு ஏற்கனவே நால்வர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 11ம் தேதி பகல்10மணிக்கு நகரசபை மண்டபத்தில் தேர்தல் அதிகாரி திரு, சிதம்பரம் வாக்குகளை எண்ண ஆரம்பித்துத் தொடர்ந்து இரவு 3மணி வரை எண்ணித் தேர்தல் முடிவுகளை அறிவித்தார்.

வெற்றி பெற்றவர்கள்

1வது தொகுதி: கே முத்துசுவாமி-சு அ நாச்சான்(கா தனி

2வதுதொகுதி: திரு சுப செட்டியப்பன் -சு

3வது தொகுதி: திரு என் அருணாசலம்செட்டியார் -கா

4வது தொகுதி: எஸ் எம் என் சோமசுந்தரம் செட்டியார் -கா,பெண்கள்தொகுதி: நா பார்வதியாச்சி -கா

5வதுதொகுதி: ஏ எல் ஏ ஆர் காளைராஜாசெட்டியார் -கா போட்டியில்லை.

6 வது தொகுதி: ரெ முருகேசன் —சு

7 வது தொகுதி: உ சீனிவாசன் -சு

8வது தொகுதி: அமிர்தலிங்கமுதலியார் -கா

9வது தொகுதி: மீரா முகைதீன் -சு

10வதுதொகுதி: தி சு பள பசித சுப்பிரமணியன் செட்டியார்-கா

11வது தொகுதி: ராம வெள்ளையன் -சு

12வது தொகுதி: ராம அருணாசலம்செட்டியார் -கா

13 வது தொகுதி: மு வெ ராமநாதன்செட்டியார் -கா

14 வது தொகுதி: பி எல் பி எல் நடராசன் செட்டியார் -கா போட்டியில்லை

15-வதுதொகுதி: சா மீனாட்சிசுந்தரம்செட்டியார்-சு போட்டியில்லை

16வதுதொகுதி: புதி பெத்த பெருமாள்பிள்ளை -கா

17 வது தொகுதி: வி கிருஷ்ணன் -கா

18-வது தொகுதி: என் பரஞ்சோதி என்ற முனியாண்டி -சு

திருத்தம்

மன்மத புரட்டாசி 13உ இதழ் 8ம்பக்கம், 2ம்பத்தி, முதல் வரியில் 'கிடையே' என்றிருப்பதைக் 'கடங்கியே' என்று திருத்தி வாசிக்க.

காரைக்குடி

காரைக்குடி அக் 12-

காரைக்குடி நகரசபைத் தேர்தல்கள் 10-10-55ல் நடைபெற்றன. நேற்றும் இன்றும் தேர்தல் அதிகாரி திரு, டி. ஆர். இராசகோபாலன் வாக்குச் சீட்டுகளை எண்ணி முடிவு கூறினர்.

வெற்றி பெற்றவர்கள்

1வது தொகுதி: திரு, அழகப்பன் அம்பலம் (பொது) ஆண்டியப்பன்(அரி கா)

2வது தொகுதி: திரு, என். கே ஆர் நாகப்பசெட்டியார்(கா)

3வதுதொகுதி: திரு எம் ஆர் எம் மெய்யப்பசெட்டியார் (சு)

4வதுதொகுதி: திரு என் சுந்தரம் (கா)

5-வது தொகுதி: திருமதி சொர்ணத்தம்மாள்(சு) திரு வி நரசிம்மய்யர்(சு)

6வதுதொகுதி: திரு ஏ ஆர் எம் எம் அருணசலம் செட்டியார்(காங்)

7-வது தொகுதி: செல்லக்கண்ணு (சு)

8வதுதொகுதி: டி ஆர் எஸ் டி கண்ணப்பன் (சு)

9-வது தொகுதி: சுப்பையா அம்பலம் (கா)

10வது தொகுதி: அருணசலம் செட்டியார் (காங்)

11வதுதொகுதி: பி ஆர் கே பெரியகருப்பன்அம்பலம்(கா)

12 வது தொகுதி: ரெங்கராஜூ செட்டியார் (சு)

13 வது தொகுதி: ஏ டி ஏ என் நடராசன் செட்டியார்(சு)

14வது தொகுதி: நாராயண அம்பலம்(கா)

15 வது தொகுதி: எம் எம் மெய்யப்ப செட்டியார் போட்டியின்றித்தேர்ந்தெடுக்கப்பட்டார்.

16வது தொகுதி: பொது இடம் சி. மு. ரு. நாராயணன் செட்டியார் (சு)

ஒதுக்கப்பட்டதொகுதி: சுந்தரம்- சு

17வதுதொகுதி: பாவடியான் என்ற பெரியகருப்பன் (காங்)

18 வது தொகுதி: பொது இடம் கவடையா செட்டியார் (கா) பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம் கோமதியம்மாள் (கா)

19வதுதொகுதி: ஏ அருளானந்தஉடையார் -கா

20வது தொகுதி: சி முத்து ராமலிங்கம் (கா)

தொடர்கதை:

வாழ்க்கைப் பாதையில்...?

அழ. கருப்பையா

பிடிவாதம் என் உயிருக்கே உலை வைத்துவிட்டது. இனி, சமுதாயத்தில் உள்ள குருட்டுக் கொள்கைகளாம் குருவிகளை விரட்டி அறிவு ஆலோலம் பாடுவதுதான் என் வேலை. மனேகர்! வா, வீட்டிற்குப்போகலாம். பிறபின் யோசிப்போம்

18

செண்பகமுதலியாரும் மனேகரும் வீட்டிற்குத் திரும்பினர். கணக்கப்பிள்ளை சின்னச்சாமி மேஜையில் கிடந்தெடுத்த கடிதத்தைச் செண்பக முதலியாரிடம் நீட்டினன். கடிதத்தைப் படித்தார் முதலியார். மனேகரன் மனம் மாமிசம் கண்ட பருந்தென அக்கடிதத்தைவட்டமிட்டுக்கொண்டிருந்தது.

அப்பா! 'அகம்'பாடிய அருமைத் தமிழ்நாட்டிலே, 'புறம்' கண்ட பெருமைமிகு வண்டமிழ் நாட்டிலே இன்று காதலுக்கு இடமில்லை. கோவைபடிக்கிறோம்; கோவை வழிச் செல்வோரைத் தடுக்கிறோம் வள்ளுவன் புகழ் பேசப்படுகிறது. மலர்மாலைகள் போட்டுப் பொய்யாமொழியின் படம்புனிதமாகக் காக்கப்படுகிறது. ஆனல் அதே நேரத்திலே, அவன் மக்கள் மன்றத்திலே மலரச் செய்தானே இன்பத்துப்பால் அது போற்றப்படுகிறதா? அப்பா! சிந்தையிருக்கிறது சிந்திக்கும் திறனில்லை; பணமிருக்கிறது பண்பில்லை; ஆணவமிருக்கிறது அறிவில்லை. சிந்தித்துப்பாருங்களப்பா! சிந்தை நோகும் செய்தியை. சமூகச் சாக்கடையிலே நெளிந்தோடும் புழுக்கூட்டத்திலே நீங்களொருவர்.

அன்று, தமிழன் காதல் கடலிலே பவனிவந்து காதல்வாழ்வு நடாத்தினனே. அவன் மனத்துடன் வாழவில்லையா? அகம் பாடிய அந்த நாளிலேதானே கற்புக்கரசி கண்ணகி தோன்றினள். காதலன் கள்வன் அல்லன்

என நிரூபிக்கப் போராடினளே அந்த வீரமங்கை! அவள் வழி வந்தவளப்பா நான். எங்கள் இரு உள்ளங்களும் ஒன்றுபட்டு ஒற்றுமைப் பண்பாடுகிறது. பொங்கி வரும் புது வெள்ளத்தைச் சிறு மணல் மேட்டால் தடுக்கமுடியுமா? சமூகக் கட்டுப்பாடென்னும் கூண்டைவிட்டு உரிமையோடு வாழப் பறந்து விட்டோம். அப்பா! இப்பொழுது உங்கள் மனம் வேதனைப்படலாம். ஆசைக்கு ஒரே மகள் அவளைப் பிரிந்துவிட்டோமே யென்று மனம் துடிக்கலாம் சமூகத் தூண்டில் உங்களைச் சுண்டிவிட்டது, அதன் பலன் வேதனைப்படுகிறீர்கள்.

வீட்டைவிட்டு வெளியேறினேன் அது தவறுதான். தந்தை சொல் தட்டினேன் அதுவும் குற்றந்தான். இக் குற்றங்கள் நிகழக் காரணம்யார்? சிந்தியுங்கள். என் மனதிற்கிசைந்த மணாளனை மணந்து கொள்ள விரும்பியது குற்றமா? மறுத்த தந்தையை எதிர்த்து வருங் காலப்பெண்டிர்க்கோர் எடுத்துக்காட்டாய் வீட்டைவிட்டு வெளியேறியது குற்றமா? என் மனம் ராமனுத்தை நாடியது. வேறொருவரையும் நான் கனவிலும் கருதவில்லை. அவரைப் பிரியேன், பிரியினும் உயிர் தரியேன். களவொழுக்கத்தினும் கற்பு நிறைவெய்துகிறதல்லவா? இப்பொழுது சொல்லுங்களப்பா நான் செய்தது குற்றமா? நான் செய்தது குற்றமெனின் மன்னித்துக்கொள்ளுங்கள். இனி உங்கள் செல்ல மகள் கிரிஜாவைக் காணமாட்டீர்கள். அவள் வாழத்தான் போகிருள்—இருட்டறையிலல்ல இன்ப உலகில். உழைப்போம் உண்போம் உறங்குவோம் இன்பம் துய்ப்போம் அறம் ஆற்றுவோம். இதுவேஎங்கள்பொழுது போக்கு.

அப்பா! நடந்தது நடந்து விட்டது. கவலைப்படாதீர்கள். சென்றவை திரும்ப மாட்டா. சென்ற காலத்தை எண்ணிச் சோர்வு வேண்டாம். வருங் காலத்தை எண்ணி வாட்டம் வேண்டாம். நிகழ் காலத்திலே ஆகவேண்டியதைச் செய்யுங்கள் காலம் வேகமாக மாறுகிறது. அதற்கேற்ப உங்களையும் மாற்றிக் கொள்ளுங்கள்.

(தொடரும்)

உங்களுக்குத் தெரியுமா?

சர்க்காரால் நிர்மாணிக்கப் பட்ட எஃகுஉற்பத்திச்சாலைகள் மூன்றில் ஒன்று ஒரிஸ்ஸாவில் ரூர்க்கேலாவில் இருக்கிறது. இதை, பெரும் பான்மையும் சர்க்காருக்குச் சொந்தமான ஹிந்துஸ்தான் ஸ்டீல் கம்பெனி, ஜெர்மானிய கூட்டு ஸ்தாபனம் ஒன்றின் உதவியுடன் அபிவிருத்தி செய்துவருகிறது. இது விசேஷமாகத் தட்டைப்பொருள்களான தட்டுகள், தகடுகள் முதலியவற்றைத் தயாரிக்கும். இத்தொழிற்சாலையில் உற்பத்தி 1959-ம் வருஷம் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவது எஃகு உற்பத்திச்சாலைமத்தியப் பிரதேசத்தில் பிலாயில் ஏற்படுத்தப்படும். இதைச் சோவியத் யூனியன்உருவாக்கித் தருவதுடன் இதற்குத் தேவைப்படும் யந்திரங்களையும் அவர்களே சப்ளை செய்வார்கள். இதில் தட்டைப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படமாட்டா; ஆனால் ரயில் தண்டவாளங்கள், கட்டுமான இரும்பு சாமான்கள் போன்ற கன ரகப் பொருள்களின் உற்பத்தியில் இது முழுக்கவனம் செலுத்தும். இவ்வுற்பத்திச்சாலையில் வர்த்தகரீதியான உற்பத்தி 1959-ம் வருஷத்தில் ஏதாவது ஒரு காலத்தில் தொடங்குவதெனத் திட்டமிடப்பட்டுள்ளது.

மூன்றுவது எஃகு உற்பத்திச்சாலையை மேற்கு வங்காளத்தில் துர்காப்பூரில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது இந்த உற்பத்திசாலைச் ஏற்படுத்துவதைப் பிரிட்டிஷ் எஃகு மிஷன் ஒன்று சிபாரிசு சய்தது; இது 10 லட்சம் டன் வார்ப்படக் கட்டிகளை உற்பத்தி செய்யும்; இதில் பெரும்பாகம் விற்பனைக்காக மத்திய, இலகுவான 'செக்ஷன்களாக'வும், 300,000 டன் வார்ப்பட இரும்பாகவும் மாற்றப்படும். பிரிட்டனிலுள்ள எஃகு உற்பத்திக் குழு ஒன்று இதை ஸ்தாபிப்பதற்கான பிரதான கண்டிராக்டர்களாக இருக்க முன்வந்திருக்கிறார்கள். சாமான்களுக்கு ஆர்டர்கள் கொடுக்கப்படும் தேதியிலிருந்து மூன்று வருஷங்களுக்குள் இத்தொழிற்சாலை வேலை பூர்த்தியடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆசிரியர் பாலகவி இராமநாதன் செட்டியாரால் தேவகோட்டை செட்டிநாடு அச்சகத்தில் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.

உ

செட்டிநாடு

வார இதழ்

மலர்-25 இதழ்-2
மன்மத-ஐப்பசி-10
வியாழன் வெளியீடு
தேவகோட்டை
ஆண்டுச்சந்தா ரூ 4
வெளிநாடு ரூ 7

ஆசிரியர்:- பாலகவி இராமநாதன்செட்டியார்

நற்றிணை - தெளிவுரை

பாலகவி

களவின்கண் புணருந் தலைவன் மணஞ்செய்து கொள்ளாது நீட்டிப்ப, அதனால் வருத்தமுற்ற தலைவி பொறுத்திரு வென்ற தோழியை நோக்கிக்கூறியது.

ஞாயிறு ஞான்று கதிர்மழுங் கின்றே, யெல்லியும், பூவீ கொடியிற் புலம் படைந் தன்றே, வாவலும் வயின்றொறும் பறக்குஞ் சேவலு,நகைவாய்க் கோளீஇ நகுதோறும் விளிக்கு, மாயக் காதலோ டதர்ப்படத் தேளித் தோர், கூறிய பருவங் கழிந்தன்று பாரிய, பரா‌ரை வேம்பின் படுசினை யிருந்த, குராஅற் கூகையு மிராஅ விசைக்கு, மானு நோயட வருந்தி யின்னும், தமியேன் கேட்குவென் கோல்லோ, பரியரைப் பெண்ணை யன்றிற் குரலே. 218 :-கிடங்கில், காவிதி கீரங்கண்ணனுர்

கதிரவன் மேற்றிசையிலிறங்கி ஒளி மழுங்கியது. இராப்பொழுதும் பூவுதிர்ந்த கொடிபோலப் பொலிவு குன்றி யிருக்கிறது. வெளவாலும் இடந்தோறும் பறந்து உலாவுகின்றது. ஆந்தைச் சேவலும் களிப்பு மிகுந்து நகைக்குந்தோறும் தன் பேடையைஅழைக்கின்றது. தீராத ஆசையுடனே நெறிப்படும்படி என்னைத்தேற்றிய காதலர் கூறிய பருவமும்சென்றுவிட்டது. பரந்த பருத்த அடியையுடைய வேம்பினது பெரிய கிளையிலே யிருந்தகுரர்லாகிய கூகையும் இராப்பொழுதிலே குழறுகின்றது. தீராத காமநோய் துன்புறுத்த வாடிப் பருத்த அடியையுடைய பனையின் மடலிலே யிருக்கும் அன்றிலின் குரலைக் கேட்டுத் தமியளாயிருந்துஇன்னும் வருந்துவேனே''

பசுந்தமிழ் மலர்

பாலகவி

ஆருண்டா ரேனினுமவ ரண்டராய்ப் பிறப்பேழு மகற்று நின்றார்
காருண்ட திருமேனிக் கண்ணனூர் கண்ணாரக் கண்டி லாரோ
பாருண்ட மண்ணையெல்லா மேனுண்டார் வேளூரெம் பரம குண்டத்
தோருண்டை மண்ணுண்டா லையிரண்டு பிறப்புமவர்க் கோழிக்க லாமே
:-புள்ளிருக்குவேளூர்க் கலம்பகம் 20

உரை:- "ஆரும்-ஆராயினும், உண்டார் எனின் - உண்டார்களானால், அவர்-அவர்கள், அண்டராய் - மேலானவர்களாய், பிறப்பு எழும்-எழுவகைப் பிறப்புக்களையும், அகற்று நின்றார்--விலக்கியவராய் நிலை பெறுவார்கள், கார் உண்ட - கரிய நிறத்தைக்கொண்ட, திருமேனி-திருமேனியை உடையவராகிய, கண்ணனூர்-கண்ணபிரான், கண்ணாரக் கண்டிலாரோ-இதனைக் கண்ணாரக் காணாதிருக்கின்றாரோ, பார் உண்ட - பூமியிலேயிருக்கின்ற, மண்ணையெல்லாம்--மண்முழுவதையும், ஏன் உண்டார்-எதற்காக உண்டார், வேளூர்-புள்ளிருக்கு வேளூரிலுள்ள, எம் பரம குண்டத்து-எமது மேலாகிய மருந்துக் குண்டத்திலேயுள்ள, ஓர் உண்டை மண்-ஒரு உருண்டை மண்ணை, உண்டால் - அருந்தினால், ஐயிரண்டு பிறப்பும்-பத்துப் பிறப்புக்களையும், அவர்க்கு-அவருக்கு ஒழிக்கலாம் - போக்கிக்கொள்ளலாம்' என்பதாகும்.

புள்ளிருக்கு வேளூரென்பது வைத்தீசுவரன் கோயிலென்று இப்பொழுது வழங்கப்பெறுகிறது. இங்கே வயித்திய நாதப் பெருமானும் தையல்நாயகி அம்மையும், முத்துக்குமார சுவாமியுமாகிய மும்மூர்த்திகளும் பிரார்த்தனைக் கடவுளராக இருந்து மெய்யடியார்கட்கு வேண்டுவன வழங்கி விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். தையல் நாயகியின் கருணை நோக்கம்

இடையீடின்றி நிகழ்ந்துகொண்டிருக்கின்ற சித்தாமிர்தம் என்னும் தீர்த்தம் இத்தலத்திற்குள்ள பெருஞ்சிறப்புக்கு அடையாளமாக இருக்கிறது.

வேதாகம முதலிய கலைகளுக்கும் எட்டாத பரமபதியாகிய சிவபெருமான், உயிர்கள் மீது வைத்த பெருங்கருணையினால் அவற்றிற்கு உண்டாகும் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதிகளையும் தீர்த்து வேண்டிய வரங்களை வழங்கி உய்விக்கும் பொருட்டு வைத்தியக் கோலங்கொண்டு தையல் நாயகியார் தைலபாத்திரமும் சஞ்சீவி வில்வமண் மருந்தும் எடுத்துக்கொண்டு உடன் வரக் கயிலையிலிருந்து எழுந்தருளி வந்து வெள்ளெருக்கு வனமாகிய புள்ளிருக்கு வேளூரில் வீற்றிருக்கின்றாரென்று புராணங்கள் கூறுகின்றன.

உயிர்ப்பிணி மருத்துவராயிருந்து உய்யக்கொள்ளும் ஆண்டவன், உடற்பிணி மருத்துவராகவும் விளங்கித் தமது எளிவரும் கருணையை அறிவுறுத்தும் இத்தலத்தின் பெருமையை அறிந்து தொண்டுபூண்டு பேறுபெற்றவர் பலர். இங்கே தையல்நாயகியார் முருகப்பெருமான் பிரமன் இந்திரன், சூரியன், சந்திரன், சம்பாதி, சடாயு முதலியவர்கள் பூசைசெய்து வழிபட்டு வேண்டிய வரங்களைப் பெற்றார்கள்.

வேளூருக்குக் காததூரத்தில் உள்ள காவிரிப்பூம்பட்டினத்தில் சடாயுவின் தமையனாகிய சம்பாதி உண்டாக்கிய நந்தவனத்திலிருந்து நாடோறும்பூக்கொய்து கொண்டுவந்து சடாயுபூசித்தார். இதனை 'யோசனைபோய்ப் பூக்கொணர்ந்தங் கொருநாளுமொழியாமே, பூசனை செய்தினி திருந்தான்' என்ற சம்பந்தப்பெருமான் திருவாக்காலறியலாம்.

சீதையைக் கவர்ந்து சென்ற இராவணனோடு போர் செய்து உயிர்துறந்த சடாயுவாற் பூசிக்கப்பெற்ற இத்திருத்தலத்தைத் தெரிசித்தபோது ஆளுடைய பிள்ளையாருக்கு அரக்கர் கோமானாகிய இராவணனைப் பற்றிய நினைவு மிகுதியாக வந்தது போலும்! தமது திருப்பதிகங்களின் எட்டாம் பாடல்கள் தோறும் ஒவ்வொரு பாட்டில் இராவணனை நினைவூட்டும் இயல்புடைய பிள்ளையார்,

வேளூர்ப் பதிகத்தில், 2, 4, 6, 8, 10 ஆகிய எண் களையுடைய ஐந்து திருப்பாடல்களில் இராவணனைப் பற்றிக் கூறியுள்ளார். திருக்கடைக்காப்பில் 'செடியாய வுடறீர்ப்பான் தீ வி னைக்கோர் மருந்தாவான்' என்று அருளியிருப்பது கொண்டு, வை த் தி ய நாதப்பெருமானது மா ண் பை நன்கு விளங்கிக்கொள்ளலாம்.

அப்பர்சுவாமிகளது திருத் தாண்டகம் 'மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்' என்று இறைவனை ஏத்துகின்றது. உடல்நோயும் உயிர்நோயும் ஒருங்கே யொழிய அருளுபவன் வயித்தியநாதனென்பதை 'அறுத்தானை யடியார்தம் அருநோய் பாவம்' என்ற தாண்டகப்பகுதி அறிவிக்கின்றது.

தேவாரத் திருப்பதிகத்தாற் சிறந்த இத்திருத்தலம் அருணகிரிநாதரது ஆறு திருப்புகழையும் உடையதாயிருக்கிறது. தருமையாதீன அருட்குரவராகிய சிவஞான தேசிக சுவாமிகள் அருளிச்செய்த முத் துக்குமார சுவாமி திருவருட்பா சொற் பொருட்சுவை மலிந்து விளங்கும் அநுபவ உண்மைகளையுடைய தோத்திர நூலாகும். இத்தலத்தைப்பற்றிப் பிரபந்தங்களும் தனிப்பாடல்களும் மிகுதியாகஇருக்கின்றன.

புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகமென்பது, சைவாசாரியாராகிய படிக்காசுப் புலவரால் இயற்றப் பெற்றது. கடவுள் வணக்கச் செய்யுள் உள்பட நூற்றிரண்டு செய்யுட்களை உடையது. அகமும் புறமுமாகிய இருவகைத் திணைகளும் விரவிவரப் பாடப் பெறும் இப்பிரபந்தத்தின் சுவையில் அறிஞர்கள் பெரிதும் ஈடு படுவர்.

வரலாற்றுக் குறிப்புக்களையெடுத்துக்கொண்டு இடம் நோக்கி அவற்றைச் சுவையுடன் அமைத்து உண்மையை உணர்த்தும் ஆற்றல் சிலபுலவரிடம்தான் அமைகின்றது. அந்த உயர்புலவர் வரிசையில் படிக்காப்புப்புலவரும் இடம் பெற்றவராவார்.

பிணிதீர்க்கும் பெருமானாகிய வைத்தியநாதர். அது தீரஅளிக்கும் மருந்து மண். கைராசியான ஒருவைத்தியனது பெருமையைக்குறிக்கும்போது 'அவன் மண்ணையள்ளி மருந்தென்று

கொடுத்தாலும் போதும்' என்று சொல்லுவதுண்டு. இதனால் வைத்திய முறையில் எந்தப் பயனையும் தராதது மண் என்பது உணரப்பெறும் அந்தமண்ணையே மருந்தாகக்கொடுத்து இருவகை நோயையும் நீக்குபவர் வைத்திய நாதரென்றால் அவரது அருளாற்றலை அளவிட்டுரைக்க முடியுமா?

'கண்ணபுர மாலே கடவுளினு நீ யதிகம், உன்னிலுமோ யானதிகமொன்று கேள் - முன்னமே, உன்பிறப்போ பத்தா முயர்சிவனுக் கொன்றுமிலை, என்பிறப்பெண் ணத்தொலையா தே' என்பார் காளமேகம். பத்துப்பிறப்புக்களை யெடுத்த திருமால் கண்ணனாகப் பிறந்திருந்தபொழுது பாருண்ட மண்ணையுண்டு, அன்னைக்கு அகில வுலகத்தையும் வாயகத்துக் காட்டினாரென்பது வரலாறு.

வைத்தியநாதரது மண்ணில் ஒரு உருண்டை உண்டாரும்- எழுவகைப்பிறப்பில் உழலும் உழற்சியொழிந்து இன்புறுவர். எல்லாரும் கண்ணுடையவரே யெனினும் கண்ணின் சிறப்புப் பற்றிக் கண்ணனென்று திருமால் அழைக்கப்பெற்றார். திருப்பாற்கடலிற் பிறந்த விடம் துரத்தியபொழுது, கருமை நிறமடைந்த மேனியுடன் கண்ணுதலைச் சரணடைந்த திருமால், பிறப்புத் துன்பம் வந்தபொழுது அப்பெருமானை மறந்தாரே யென்றுகூறிச் சிவபரத்துவம் சாதிக்கும் ஆசிரியரது ஆற்றல் பாராட்டத் தக்கதல்லவா?

'ஆர் உண்டார் எனினும்' என்பதில் பக்குவரும் அபக்குவருமாகிய அனைவருக்கும் வேளூர் மருந்து பிறப்பறுத்துப் பேரின்பங்கொடுக்கும் என்ற உண்மை வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தங்கம், வெள்ளி

மதுரை அக் 26-

பாட்லா	94	12	0
சவரன்	62	0	0
ரெடிமேட் தங்கம்			
(சவரன் எடை)	59	8	0
வெள்ளி 100தோலா	170	0	0
வெள்ளி 1தோலா	1	11	0

சைவாலயங்களில் சம்ஸ்கிருத அர்ச்சனையே வேண்டும்.

சித்தாந்த பண்டித பூஷணம் ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை

(முன்தொடர்ச்சி)

வரம்போ அழிந்தது. ஆயினும் எப்படியாவது வாழவேண்டும். கைக்கு அகப்பட்ட தொன்றைப் பற்றிக் கொண்டாற்றான் அது கூடுமெனத் தோன்றுகிறது. அப்பற்றுக்கோடு அவ்வாழ்க்கைக்கு உதவி வருவது போல அவர் கொள்கைக்கு அவ்வாதாரங்களும் உதவி வருகின்றன. சிவாயநம என்ற மந்திர ராஜத்தின் முதலெழுத்தே தமிழொலியன்று. விசாரணையாவது மொழிகளின் ஒலிக்கு ஆற்றல் உண்டா? இல்லையா? என்பதன்று. மந்திரங்களின் ஒலியாற்றல் அவையல்லாத சப்தங்களுக்கு உண்டா? இல்லையா? என்பதே. இல்லையென்பதே சித்தம்.

'வடமொழி மந்திரங்களிலுள்ள உச்சரிப்பு ஒலி தமிழிலில்லை- மந்திரத்தின் சக்தியெல்லாம் அந்த உச்சரிப்பு ஒலியில் தான்இருக்கிறது என்கின்றனர் சிலர். உச்சரிப்புஒலியில்தான்சக்தியெல்லாம் இருக்கிறது என்றால் நன்றாக உச்சரிப்பவர்களைக் கொண்டு பல்லாயிரக்கணக்கான இசைத்தட்டுகளைத் தயார் செய்து உலகமெல்லாம் மந்திரத்தின் சக்தியைப்பரப்பிவிடுவது சுலபமல்லவா? இப்போது 100-க்கு 95 உச்சரிப்பே சரியாகத் தெரியாத அர்ச்சகர்களும் நமக்குத் தேவைஇல்லையல்லவா?' (21-8-55 தமிழ்நாடு) என்கிறார் நவீனர். இஃதொரு பரிகாசப் பேச்சு. மந்திரங்களின் ஒலியாற்றல் பற்றிய பேச்சிருக்கட்டும். அவற்றின் பொருளுக்குச் சக்தியுண்டென்பதையாவது அவர் சம்மதிக்கிறாரா? எந்தப் பதத்துக்கும் சப்தார்த்த சம்பந்தம் பேதாபேதமாகலின் அர்த்தம் தெளிவாக விளங்க வேண்டுமானால் சப்தம் தெளிவாக உச்சரிக்கப்படவேண்டும். முதலில் தமிழிலுள்ள சாமானிய பதங்களையெடுத்துக்கொள்ளலாம். அவனை அவலென்றும், அவலை அவளென்றும், பழத்தைப் பயமென்

றும், குழம்பைக் குளம்பென்றும் உச்சரிப்பவர் தாம் வேண்டுவதை விட்டு வேறொன்றையே பெறுதற்குரியர். அவ் வுச்சரிப்புச் சொற்சோர்வாகும். 'சொற்சோர்வு படேல்' என்றது ஆத்திசூடி. 'நித்தியத்துவங் கேட்பானித்திரையென றேமயக்கந், துய்த்தனனுங் கும்ப கன்னன் சோமேசா-வெத்திறத்தும், ஆக்கமுங் கேடுமதனல் வருதலாற், காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு' என்ற சோமேசர் முதுமொழி வெண்பாவையுங்காண்க. ஆகலின் தவருக உச்சரிப்பவரைத் திருத்துவதே தமிழ்ப் பற்றுடையார்க்குக் கடன். அதை விட்டு நல்ல வுச்சரிப்பை இசைத்தட்டின்மூலம் பரப்பினல் தமிழொலியினுற்றல் உலகில் விளங்கிவிடும், தாறுமாறுக வுச்சரிப்பவரைத் தொலேத்து விடலாம் என நவீனரை மாறினல் அவர் என் செய்வர்? விழிப்பர். இனி மந்திரங்களுக்கு வாலாம். மந்திரம் என்ற சொற்பொருளே என் புத்தகத்திற் காண்க. மந்திரங்கள் தெய்வத்தன்மை யுடையன. உயிருக் குறுதி யளிப்பன. சைவசமயிகள் தம் உடம்பில் உயிரொன்றிருப்பதை உணர்வா ராகலின் அவற்றினிடம் அளிவிறந்த பயபக்தியுடனிருப்பர். அவை சிவபிரானுக்குத் திருமேனியுமாம். அவற்றைப் பழிப்பவர் அக்கடவுளேயே பழிப்பவ ராவர். மேலும் அவற்றின் சப்தம் உமாசொரூபம், அர்த்தம் சிவசொரூபம். அச்சப்தத்தைப் பழிப்பது உமாதேவியாரையே பழிப்பதாகும். அருளே அந்த அம்மையார். அப்பழிகாரர் அவ்வருளேப் பெறுதலுமிலர். அவர் சிவபிரானேடு எத்துணே உறவு கொண்டாடினுலும் உய்தி பெறுர். அக்கடவுளுக்கு நெருங்கிய உறவினன் தக்கன். அவன் தலேயே துண்டித்து உருட்டப்பட்டது. அப்பழிகாரர் அதனே நினேக. அவருக்குப் புத்தி புகட்டவே 'அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ, தஞ்ச லறிவார் தொழில்' என்ற குறளும் எழுந்தது. மந்திரங்களின் சப்தத்துக்கு ஆற்றலுண்டென அவர் ஒத்துக்கொண்டதுங்காட்டப்பட்டது.

தேவார திருவாசகப் பாடல்களே அவற்றின் ஆசிரியரின் திருவுள்ளப்படியே பாடவேண்டும். அத்திருவுள்ளத்தைத் திருக்கடைக்காப்புக்களில் வந்தவிடத்துக்காண்க. (தொடரும்)

உ
சிவமயம்
பாலரூவாயர் துணை



அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

செட்டிநாடு

மன்மத ஐப்பசி 10

திருமூலர் திருநாள்

சீகண்ட பரமசிவனிடத்து ஞானோபதேசம்பெற்றவர் திருநந்தி தேவர். அவரது மாணவராய்ச் சிறந்தவர் எண்மர். அவருள் ஒருவர் திருமூலர். இதனை 'நந்தி யருள் பெற்ற நாதரை நாடிடில், நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி, மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரம, ரென்றிவ ரென்னோ டெண்மருமாமே' என்ற திருமந்திரம் அறிவிக்கின்றது.

தென்னாடு செய்த தவப்பயனாற் சிவஞானச் செல்வர் பலரை அவ்வப்போதுகளில் அனுப்பியுதவுவது ஆண்டவனியல்பு என்பதை வரலாறுணர்ந்தோர் அறிவர். திருமந்திரமாலை யென்னும் சிவாகமத் தமிழ்நூலைத் தென்னாட்டில்வெளிப் படுத்தக் கருதிய திருவருள், நந்தி திருவருள் பெற்ற நான்மறை யோகிகளி லொருவரை இங்கே வரச்செய்தது.

கயிலாயத் திருந்தவராகிய அந்தச் சித்தர், பொதியமலையிற் சேருங் கருத்துடன் திருக்கேதார முதலிய திருத்தலங்களை வழிபட்டுக் கொண்டு திருவாவடுதுறையை அடைந்தார். அத்தலத்தைப்பிரிந்து செல்ல அவர்மனம் இடந்தரவில்லை ஆமேய்ப்பார் குடித்தோன்றி முறையாக நிரைமேய்த்த மூலன் என்

பான், ஒருநாளில் வினையொழிய வாழ்நாளொழிந்து வீட, அதற்கிரங்கி அவன் மேய்த்த ஆனிரைகள் அவனுடலைச்சூழ்ந்துபுலம்புவதைக் கண்டுமனநெகிழ்ந்துதன்னுடம்பை யொருபாற் சேமித்துவைத்து அவனுடம்பில் புகுந்து மூலனுயெழுந்தார் சித்தர்.

நமது பேறுகாரணமாகச் சித்தர் உடம்பு திருவருளால் மறைக்கப் பெற்றது. மூலனுடம்பிற் புகுந்த சித்தர் திருமூலநாயனுராகித் திருக்கோயிற் பிராகாரத்திலுள்ள அரச மரத்தின் அடியில் தவமிருந்து ஆண்டுக்கொரு திருப்பாடலாக மூவாயிரந் திருப்பாடல்களைஇயற்றி அளித்தார்.

திருமந்திரம் சைவசமயக் கருவூலம், அதில் இல்லாதது ஒன்றுமில்லை. உலகத்தில் தொடங்கி இறைவனில் முடிகின்றதொரு தமிழ்நூல் உண்டென்றுல் அது திருமந்திரமேயாகும். பன்னிரு திருமுறைகளில் பத்தாவதாக விளங்குகின்ற இது, சிவயோகச் செல்வத்தை நுகர்வித்துச் சிவப் பேற்றை வழங்கும் பெருங் கலையாகத் திகழ்கின்றது.

நான்பெற்ற இன்பம் பெறுகவிவ் வையகம்' என்று திருமந்திரமருளிய திருமூலரை 'நம்பிரான் திருமூலன்' என்று உளப்பாட்டுத் தன்மையில் உணர்த்துகின்றுர் நம்பியாரூரர். திருமூலரது நினைவுநாள் **30-10-55** ஞாயிற்றுக் கிழமையாகும். அன்று அவரை நினைந்து வழிபட்டு அவர் பெற்ற இன்பத்தை நாமும் பெறமுயல்வோமாக.

சந்தா நேயர்களுக்கு!

ஐயன்மீர்!

கடந்த புரட்டாசி வரையுள்ள தங்கள் சந்தாப்பாக்கிகளை அனுப்பித்தரும்படி 10.10-55ல் கார்டுகள் எழுதியிருந்தோம். அதன்படி பாக்கியுள்ளதொகையை அனுப்பித்தரும்படி மீண்டும் வேண்டுகிறேம்.

அன்புள்ள,
அமைச்சர்

விதிவழிநோற்க விரதம் பயன்தரும்

சிவசூரியநாராயணபிள்ளை, இட்டமொழி

நடப்பு மன்மத வருஷத்தில் புரட்டாதிமீ 1உ நவராத்திரி ஆரம்பங் குறித்தது, சைவப் பஞ்சாங்கம் ஒன்றே. அந்தத் தேதியுங் கடந்து போயிற்று. அதில் எவரும் ஆரம்பஞ் செய்ததுமில்லை. அதன் தொடர்பாய் எதுவும் நடந்ததுமில்லை. ஏனெனில்? அந்தப் பஞ்சாங்கக் கணிதர் திரு, இ. மு. சுப்பிரமணிய பிள்ளையே கணித்துக் கொடுத்த திருநெல்வேலிப் பஞ்சாங்கத்தில் புரட்டாதிமீ 29உ நவராத்திரி ஆரம்பங் குறித்திருந்ததே காரணம் இந்த நாளே மகாளயஅமாவாசைத்தினம். ஆதலால்அன்று நவராத்திரியாரம்பம் ஆகவேயாகாது. மேலும் அந்தப் பஞ்சாங்கத்தில் ஐப்பசிமீ 8உ மகாநவமி குறிக்கப்பெற்றிருப்பதால் நாள் பதினொன்றாக நீண்டுவிட்டது. இதனால் இரண்டும் தவறாய் முடிந்தன. நிற்க, புரட்டாதிமீ 31உ நவராத்திரிஆரம்பம் சில பஞ்சாங்கங்களில் குறிக்கப்பெற்றிருக்கின்றது. இந்த நாளில் பிரதமைத்திதி அணுவும் ஒட்டவில்லை. துதியைத் திதியே .தோன்று நிற்கின்றது. இதனால் இத்தினம் 'பிரதிபத் தினமாரப்ய' என்ற ஆகம வாக்கியத்தால் ஆக்ஷேபணை பெறுகின்றது. இந்தப் பஞ்சாங்கங்களில் ஐப்பசிமீ 8உ மகாநவமி குறிக்கப்பெற்றிருக்கின்றது. அன்று ராத்திரிநவமி திதி அணுவேனுமில்லை. தசமி திதியே ராத்திரியை வியாபித்துக்கொண்டது. ஆனதால் அந்நாள் ஒன்பதாம் ராத்திரிக்குப் பொருத்தமானதல்ல. அதுமட்டுமா திண்டாட்டம்? அதன் மறுநாள் மாலைப்பொழுதில் விஜய தசமி கொளத் தசமி திதி வேண்டும். அதுவும் அன்று இல்லை. ஏகாதசியில் விஜயதசமி கொள்ளக்கூடாது. இவ்விதமான திண்டாட்டங்கள் எதுவும் ஏற்படாத புரட்டாதிமீ 30உ நவராத்திரி ஆரம்பங்குறித்த பஞ்சாங்கங்களுமுள. அவைகளின்படி ஆரம்பங்கொள்ளுதலே சாலவும் நன்று. அன்று திதிகளில் ஆதியாய பிரதமைத் திதியும், யோகங்களில் ஆதியாய விஷ்கம்பநாமயோகமும் கூடியதோடு

உடன்சேர்க்கையாய் ராத்திரி விரதத்தைச் சிறப்பிக்கத்தக்க பிரகாசம்தருக தீபமாம் சுவாதி நக்ஷத்திரமுங் கூடி விடுகிறது. இன்னனவான திதி நக்ஷத்திர யோக முக்கூட்டு, சுருதி யுக்தி அனுபவங்கட்கு ஒற்றுமையாய் வந்து, நவராத்திரி ஆரம்பத்திற்கு அதிவிசேடத்தைவிளக்குகின்றது. இவ்விதப் பஞ்சாங்கங்களில் ஐப்பசிமீ 7உ மகாநவமி குறிக்கப்பெற்றிருக்கின்றது. இந்த நாள் பண்டுநடந்த மகிஷாசுரஸம்மாரத்தை ஞாபகப்படுத்தத்தகுந்த நாள். அதாவது படுகள வேளையாம் சம்ஹார காலத்தினும் ராத்திரி யோகம் எனக் கூடிடுஞ்சிறப்பு உண்டு. ஒன்பதாவது ராத்திரி அது வென்றும், அதுவே மகாநவமி பூஜைக்குரித்தென்றும் நிலைபெறுகின்றன. இஃதோடு இதன் மறுநாள் மாலையில் தசமி திதியிருப்பதால், அது அன்றுவிஜய தசமியாஞ்சமீபூஜைக் குரித்தாயிற்று.

கந்த சஷ்டி விரதாரம்பம் நடப்பு மன்மதஹூ ஐப்பசிமீ 29உ என்பதைப் பெரும்பாலான பஞ்சாங்கங்கள் ஏற்று நிற்கின்றன. சைவப் பஞ்சாங்கம் ஒன்றுமட்டுமே, நவராத்திரி ஆரம்பிக்க வேண்டிய தினத்தில் கந்தசஷ்டி விரதாரம்பத்தைக் குறித்தது. உத்தமோத்தம விரதகாலங்களைப் பிழைகளாகக் குழப்பிய காரணத்தால், அந்தக் கந்தசஷ்டி ஆரம்பக் குறிப்பின் தலைமேல் ○ வெள்ளை வட்டமிட்ட மகாளய அமாவாசைக் குறிப்பும் வந்து, அந்தப் பஞ்சாங்கக் கணிதரின் ஞாபகத்தைப் பிழையாக்கிவிட்டது, அது எவ்வாறுயினும் அந்தக் கணிதரே கணித்துக்கொடுத்த திருநெல்வேலிப் பஞ்சாங்கத்தில் கந்தசஷ்டி ஆரம்பம் ஐப்பசிமீ 29உ என்றுதான் குறிக்கப்பெற்றிருக்கிறது, ஆனதால் கந்தசஷ்டிவிரதம் பற்றி அதிகமான விளக்கம்வேண்டாம்.

மேற்காட்டிய காரணங்கள் பலவற்றுனும் நடப்பு மன்மத வருஷம் புரட்டாதிமீ 30உ நவராத்திரி ஆரம்பமும், ஐப்பசிமீ 7உ மகாநவமியும், 8உ விஜய தசமியும், 29உ கந்தசஷ்டிவிரதாரம்பமும், கார்த்திகைமீ 4உ கந்தசஷ்டிசூரசம்ஹாரமும், 5உ திருக்கல்யாணமும் கொண்டாடி நலன்கள்யாவும் அடைந்தனுபவிக்க வேண்டுகிறேன்.

தேயிலை ஏற்றுமதிக்கு?

கொழும்பு அக் 22

இலங்கையில் பிரபலமான தேயிலை உற்பத்தியாளர் பலர் இலங்கை வங்கிக் கட்டிடத்தில் நேற்றுக்கூடி, தேயிலை ஏற்றுமதிசெய்வதற்கான ஒரு கார்ப்பரேஷன் உருவாக்குவதென்று தீர்மானித்தனர்.

கார்ப்பரேஷன் முதலில் தேயிலை ஏற்றுமதி செய்வதில் தான்கவனம்செலுத்துமென்றும் பின்னர் மற்றும் இலங்கை உற்பத்திப் பொருள்கள் ஏற்றுமதியிலும், இறக்குமதியிலும் ஈடுபடுமென்றும் முடிவு செய்யப் பட்டது.

திரு எச். டபிள்யூ, அமரசூரியா இந்தக் கூட்டத்தைக் கூட்டினார்- செனட்டர் கே ஆதமலி, திரு எஸ் பத்மநாதன் செனட்டர் ஜஸ்டிஸ் கொத்தலாவலை முதலியோர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கார்ப்பரேஷன் திட்டம் இயங்குவதற்கான நிதி முறைகளை இலங்கை வங்கிஜெனரல் மானேஜர் திரு சி லோகநாதன் விளக்கினார்.

நோட்டீஸ்

புதுக்கோட்டை டிமுனிசிப் கோர்ட்டு
O. P. 39 of 1955

1. அடைக்கம்மைஆச்சி, 2. மைனர் பழனியப்பன், 3.மைனர் குப்பான்செட்டியார் என்ற முத்தய்யா, 4. மைனர் வெங்கடாசலம், 5. மைனர் அண்ணாமலை

—மனுதார்கள்

2முதல் 5 மைனர்களுக்கு 1ல் மனுதார் Next friend

நச்சாந்துபட்டி Late, K. PL. குப்பான் செட்டியாரால் ஓரியண்டல் கவர்ண்மெண்ட்செக்யூரிட்டி லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனியில் போட்டிருந்த பாலிஸி நம்பர் 697435படி ரூபாய்6477-12-0ஐ யும் வசூல்செய்ய ஷை மனுதார்களுக்கு Succession certi-ficate கொடுக்க வேணுமென்று போட்டிருக்கும் ஷை மனு விசாரணைக்கு ஷைகோர்ட்டில் 5-11-1955 டயம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஜீ. சுவாமிநாதன்
அட்வகேட்

புதுக்கோட்டை
23-10-55



திருக்குற்றாலநாதருலா:- திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து அதிபர்களாகிய ஸ்ரீ ல ஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுடைய பொருளுதவியால், அடையாறு மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையத்திலிருந்து ஐயரவர்களின் நூறாவதாண்டு நிறைவு விழா நினைவுப் பிரசுரமாக வெளியிடப்பெற்றது. பதிப்பாசிரியர் எல். ஸ்ரீநிவாஸய்யர். விலை ரூ 2-4-0

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள், சைவமும் தமிழும் தழைத்தோங்க வேண்டுமெனத் திருவுளங்கொண்டு புரிந்து வருகிற அருச்செயல்கள் பலவற்றுள் நூல்வெளியீடும் ஒன்று. இதுவரை எத்துணையோ நூல்கள் அவர்களது அருட்கொடை வளத்தால் வெளிவந்துள்ளன. தேனும் பாலும் போன்ற செஞ்சொற்பாடல் புனையும் திரிகூடராசப்பரின் திருவாக்கு, ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்களின் கருணைத் திறத்தால் சிறப்புமிகுந்து, இப்பதிப்பில் வெளிவந்துள்ளது.

வரப்பெற்றோம்

பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்க முப்பத்திரண்டாம் ஆண்டு (1954-55) அறிக்கை, கம்பை தனவைசியர் கல்விக் கழக 27வது ஆண்டு அறிக்கைகள் வரப்பெற்றோம்,

நகரக் காங்கிரசுக் குழு

தேவகோட்டை அக் 18- நகரக் காங்கிரசுக் குழுத்தலைவர் திரு, டி. எஸ். ராசகோபாலய்யர் உடல்நிலை காரணமாகத் தலைவர் பதவியிலிருந்து விலகிவிடுவதாக இக்குழுச் செயலாளரிடம் பதவி விலகல்கடிதத்தைக் கொடுத்து விட்டதாகத் தெரிகிறது.

செயலாளர் திரு எம் சுப்பிரமணியபிள்ளைதம்பதவியிலிருந்து விலகிவிடுவதாகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு இன்று அறிவித்திருக்கிறார்.

தொடர்கதை:

வாழ்க்கைப் பாதையில்...?

அழ. கருப்பையா

காலத்திற்கேற்பக் கருத்துக்களும் மாறுகின்றனவல்லவா? கால மாறுபாட்டால் அழியாதது, அருகாதது, பெருகுவது காதல் ஒன்றுதான். இதோ! என் அத்தான் வந்துவிட்டார். வருகிறேனப்பா.

தங்களன்புள்ள

'கிரி...ஜா...கிரி...ஜா...' என் கண்ணே அறியாமையால் உன்னை இழந்தேன். நீ குற்றவாளியல்ல கண்ணே. நான்தான் குற்றவாளி. மனேகர்! பார் கிரிஜாவின் எழுத்துக்களை. அவளுடைய ஒவ்வொரு எழுத்தும் மூடக்கொள்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கிறது. நான் யாருக்காக வாழ்ந்தேனே அவள்போய் விட்டாள். இறைவா! என்னை என் படைத்தாய். என்னைப் படைத்துக் கிரிஜாவைப் பிரித்துப் பரிதவிக்கவிட்டாய். அடியாருக்கு அருள் புரிவாயாமே ஆண்டவனே. நானும் உன் அடியான்தானே! எனக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காய் வா. அதோ! என் அருங்குணவதி கிரிஜா வருகிறாள். கிரிஜா இதோ வந்துவிட்டேன். என்னை மன்னித்துக்கொள். உலகம் அழிகிறது. காதலுக்கு இடம் தர மறுத்தவர்கள் மாள்கிறார்கள். ஹ...ஹ...ஹா. நானும் அழிகிறேன். என் சமாதி மீது......' என்று செண்பகமுதலியார் கீழே விழுந்தார்.

19

ஜீலம் நதிக்கரையின் ஓரத்திலே, வானக்கடலிலே மிதக்கும் பிறைச் சந்திரன்போலப் படகு கிரிஜாவையும் ராமநாதத்தையும் சுமந்துகொண்டு சென்றது. சாஸ்மா ஷாஹி என்ற ஷாஜகான் உண்டாக்கிய நந்தவனத்தைக் காணப்போகிறோம் என்று அவர்கள் உள்ளத்திலே இன்பப் பேரிகை முழங்கிக்கொண்டிருந்தது.

'அத்தான்! இந்த இன்ப நேரத்திலே பயம் என்னைவாட்டு

கிறதே! அமைதியான இந்த ஆறும் சீறிஎழும்தன்மையுடைய தல்லவா? நமதுஇன்பவாழ்க்கை புயல்காற்றெனக் கடிதில் சென்ருல் நாம் என்ன செய்வது! இன்று வாழ்கிருேம்...நாளை நமதுநிலை...மலர்ந்தமலர் வாடாமலா இருக்கும் என்ருள் கிரிஜா.

'என் இதயம் மலரச் செய்த இன்பரோஜாவே! கிடைக்கும் நேரத்திலே இன்பமாய் இரு. துன்பத்தை விரும்புகிறவர்களுக்கு இன்பம் கிடைப்பது எளிது கண்ணே! ஒன்றுபட்ட நம் இதயங்களைத் துண்டுபோட எண்ணினுர் உன் தந்தை. அன்பு பொங்கிவரும் இதய ஆற்றிலே அடக்குமுறையாம் அணைபோட விரும்பினுர் உன் தந்தை.மங்கை தரும்போதை, இலக்கியம்தரும் இன்பம், கன்னல் தரும் கனிச்சாறு, அறிஞர்களிடையே தோன்றிய ஆழ்ந்த கருத்துக்கள் இவற்றை அனுபவிக்காதே யென்று கூறினுல் யார் கேட்பர்? மங்கை பங்கனை வணங்குகிருர். வாழ்த்துகிருர் மாதொரு பாகன் புகழை. ஆனுல் நாம் இணைவது அவருக்குப் பிடிக்கவில்லை' என்று கூறினவன் வானத்திலே வைரமின்னல் தோன்றுவது கண்டு திடுக்கிட்டான். 'கண்ணே! நாம் இணைவது இறைவனுக்குக் கூடப் பிடிக்கவில்லைபோலும். தென்றலிலே உன் தேன் விருந்து பருகினேன். உடனே இயற்கையன்னை மின்னலைக்காட்டி மிரட்டுகின்ருள்.! வா! உள்ளே போவோம்' என்ருன் ராம்நாத்.

உள்ளே சென்ற சிறிது நேரத்திலே சூல்கொண்ட கருமேகங்கள் மழைத்துளிகளைச் சிதறின. மழையோடு புயலும் சேர்ந்து கொண்டு காஷ்மீர் மக்களைக் கலங்கச் செய்தது.' ஆற்றுவெள்ளம் அதிகமாகிக் கொண்டேவந்தது. எங்கு நோக்கினும் இடி முழக்கங்கள். பறவைகள் தங்கள் இல்லம் நோக்கி விரைந்தன. மிருகங்கள் தங்க இடந்தேடி இங்குமங்கும் தாவின. கரையிலிருந்த மரங்கள் முறிந்தன. பறக்கமுடியாத பறவை ஒன்று படகுவீட்டில் விழுந்தது. படகோட்டி அதை அவர்களிடம் காட்டிவிட்டுக் கரையைநோக்கிப் படகை விரைவாகச் செலுத்துவதாகக் கூறினுன்.

அத்தான்! இச் சிறு பறவையின் கதி போன்றதுதானு நம் வாழ்க்கை. (தொடரும்)

தெரிந்து கொள்ளுங்கள்

1954ம் வருஷம் முதல் பாதி காலத்தில் உலகில்நடந்த பருத்தி ஜவுளி வர்த்தகத்தைவிட 1955ம் ஆண்டு முதல்பாதியில் நடந்த வர்த்தகம் 9 சதவிகிதம் குறைந்திருந்த போதிலும், இக்கால வரையில் இந்தியாவின் ஏற்றுமதிகள் 6.1 சதவிகிதம்தான் குறைந்தது- இந்த வியாபாரத்தில் இந்தியா இரண்டாவது ஸ்தானத்தைத் தொடர்ந்து வகித்துவந்தது. ஜப்பான், பிரிட்டன் ஆகிய நாடுகளில் ஏற்றுமதிகள் அதிக சதமானம் குறைந்துவிட்டன.

பல ராஜ்யங்களிலிருந்தும் கிராமத் தலைவர்களைப் பொறுக்கியெடுத்து அந்தந்த ராஜ்யத்திலுள்ள இதர சமுதாய நலத் திட்டப்பகுதிகளுக்கு அவர்களை அனுப்பிவைத்து, ஆங்காங்கு கையாளப்படும் முறைகளை அவர்கள் நேரில் கண்டறிவதற்கான திட்டமொன்றை சமுதாய நலத் திட்டநிர்வாகம் வகுத்திருக்கிறது.

நடப்பு பருவத்தில் மொத்தம் 15.86 லக்ஷம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டிருப்பதன் மூலம் சர்க்கரை உற்பத்தியில் நாட்டில் ஒரு புதிய உச்சம் அடையப்பட்டிருக்கிறது. இவ்வருஷ உற்பத்தி 1951-52ல் ஏற்பட்ட உச்ச உற்பத்தியளவை விட 87,000 டன் அதிகம்.

கட்டுப்பாடு எடுக்கப்பட்டதற்குப் பின், வெள்ளைச் சர்க்கரையின் உபயோகத்தேவை 1952ம் ஆண்டு இறுதியில் 10 லக்ஷம் டன்னாகஇருந்தது, 1953-54ல் 18.3 லக்ஷம்டன்னாகஉயர்ந்தது.

சென்ற ஏழு வருஷங்களில் புனர்வாழ்விப்பு நிதி நிர்வாகத்தினர் கிழக்குப் பாக்கிஸ்தானிலிருந்து வந்த அகதிகளுக்கு ரூ, 275.87 லக்ஷமும், மேற்குப் பாக்கிஸ்தானிலிருந்து வந்துள்ள அகதிகளுக்கு ரூ693.75 லக்ஷமும் கடனாகக் கொடுத்திருக்கிறார்கள்.

நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள 999 ஸ்தாபனங்களில் சுமார் 62,000பேர்கள் தொழில்நுட்பப் பயிற்சி பெற்றுவருவதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆசிரியர் பாலகவி இராமநாதன் செட்டியாரால் தேவகோட்டை செட்டிநாடு அச்சகத்தில் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.

உ

செட்டிநாடு

வார இதழ்

மலர்-25 இதழ்-3
மன்மத-ஐப்பசி-17
வியாழன் வெளியீடு
தேவகோட்டை
ஆண்டுச்சந்தா ரூ 4
வெளிநாடு ரூ 7

ஆசிரியர்:- பாலகவி இராமநாதன்செட்டியார்

நற்றிணை-தெளிவுரை

நெய்தல்

களவில் நின்று மணம் புரிந்துகொள்ளக் கருதிய தலைவன் அது காரணமாகப் பொருளீட்டிவருதற்குப் பிரிய அதற்கு ஆற்ருளாய தலைவி தோழியை நோக்கிக் கூறியது.

கண்ணுந் தோளுந் தண்ணறுங் கதுப்பும், பழநல மிழந்து பசலை பாய,
வின்னுயிர் பெரும்பிறி தாயினு மென்னதூஉம், புலவேன் வாழி தோழி
சிறுகா, லலவனொடு பெயரும் புலவுத்திரை நளிகடற், பெருமீன் கோள்
ளுஞ் சிறுகுடிப் பரதவர், கங்குன் மாட்டிய கனைகதி ரோண்சுடர்,
முதிரா ஞாயிற் றெதிரொளி கடுக்குங், கானலம் பெருந்துறைச் சேர்ப்பன்,
ருனே யானே புணர்ந்த மாறே 219 :-தாயங்கண்ணனுர்

தோழீ! நீ நெடிது வாழ்வாயாக. எனது கண்ணும் தோளும் மெல்லிய நறிய கூந்தலும் பழைய அழகு கெட்டுப் பசலைபாய இனிய உயிர் இறந்து படுவதாயினும், சிறிய காலையுடைய நண்டுக ளோடு பெயருகின்ற புலவு நாறும் அலைகள் நெருங்கிய கடலிலே பெருமீனைப் பிடிக்கின்ற சிறுகுடியிலுள்ள பரதவர்கள் இரவி லிட்ட நெருங்கிய கதிர்களையுடைய ஒள்ளிய விளக்கம்,இளஞாயிற் றின் எதிரொளிக்கு ஒப்பாகின்ற கழிக்கரைச் சோலையையும் பெரிய கடற்றுறையையுமுடைய நமது காதலன், தமியனாய் வந்து என்னைப் புணர்ந்து தலையளி செய்ததனால் அவன்மீது புலப்பேனல் லேன் :-பாலகவி

பசுந்தமிழ் மலர்

பாலகவி

ஆனேறே போந்தா லழிவுண்டே யன்புடைய
நானேதான் வாழ்ந்திடினு நன்றன்றே - வானோங்கும்
வாமாண் பொழிற்றில்லை மன்றைப் பொலிவித்த
கோமானை யித்தெருவே கொண்டு

:-கோயில் நான்மணிமாலை37

கோயில் நான்மணிமாலையென்பது சிதம்பரத் திருத்தலத்தில் ஆனந்தக்கூத்தாடும் ஆண்டவனைத் தலைவனாகக் கொண்டு, பட்டினத்துப்பிள்ளையாரால் இயற்றப் பெற்றதொரு பிரபந்தம். வெண்பா, கலித் துறை ஆகிய இரு வகை யாப்பால் அமைந்த இருபது பாடல்களும், அவற்றுடன் ஆசிரியப்பாவும் கூடிய முப்பது பாடல்களும் அவற்றுடன் ஆசிரியவிருத்தமும் கூடிய நாற்பது பாடல்களும் அமைய முறையே இரட்டைமணி மாலையும், மும்மணிக் கோவையும், நான்மணி மாலையும் பாடப் பெறும். இவைகள் அந்தாதித் தொடையாக அமைக்கப்பெற வேண்டியவை.

பட்டினத்துப் பிள்ளையார் அருளிச் செய்த பிரபந்தங்களில்

உரை:- 'ஆன் ஏறே - இடப ஏறே, வான் ஓங்கும் - ஆகாயம் வரை உயர்ந்திருக்கின்ற, வாமம் - அழகு பொருந்திய, மாண் - மாட்சிமை மிகுந்த, பொழில் - சோலைகள் சூழ்ந்த, தில்லை மன்றை - திருச்சிற்றம்பலப் பேரவையை, பொலிவித்த - விளக்கமுறும்படி செய்த, கோமானை - பரமபதியாகிய நடராசப் பெருமானை, கொண்டு - தாங்கிக்கொண்டு, இத்தெருவே - இந்தத் தெருவின் வழியாக, போந்தால் - வந்தால், அழிவு உண்டே - கெட்டுவிடுமா, அன்புடைய - அப்பெருமானிடத்தில் அன்புடைய, நானே தான் வாழ்ந்திடினும் - நான் மகிழ்ச்சியுற்ற வாழ்க்கையைப் பெற்றாலும், நன்று அன்றே - அது நல்லதாகுமல்லவா' என்பதாகும்.

கோயில் நான்மணிமாலேயும் திருக்கழுமல மும்மணிக்கோவையும், திருவிடைமருதூர் மும்மணிக்கோவையும் இந்த இனத்தைச் சேர்ந்தவை. பட்டினத்துப்பிள்ளையார் பாடியனவாகிய ஐந்து பிரபந்தங்கள் பதினொராந் திருமுறையில் சேர்க்கப்பெற்றுள்ளன. இவையன்றி இன்னுஞ் சில பிரபந்தங்களும் தனிப் பாடல்களும் அவர் பாடியன வென்று வழங்கப் பெறுகின்றன. இவை யிரண்டிற்குமிடையே காணப்பெறுகின்ற சொற்பொருட்போக்கு, சுவை வேறுபாடுகளைக் கொண்டு பட்டினத்துப்பிள்ளையார் என்ற பெயர் கொண்ட ஆசிரியன்மார் இருவர் இருந்திருத்தல் வேண்டுமென ஆராய்ச்சியாளர் கூறுவர்.

பட்டினத்துப்பிள்ளையாரது வரலாறு பெரும்பான்மையோரால் அறியப் பெற்றது. அவர் முன்னொரு கற்பகாலத்தில் குபேரனயிருந்தவரென்பதும் சிவபெருமானுக்குத்தோழராகிய அவர் ஒருநாள்சிதம்பரத் திருத்தலத்தைத்தெரிசித்து அதுபோலவே மற்றைத் திருத்தலங்களையும் தெரிசிக்க விரும்பிக் காவிரிப்பூம்பட்டினத்தையடைந்து அங்குச் சிலநாட்கள் தங்கியிருக்க அநுமதி வேண்டினரென்பதும், போகசரீரத்துடன் போகபூமியில் வாழ்கின்ற குபேரனருக்குக் கரும சரீரத்தைக்கொடுத்து இறைவன் அவர் விருப்பத்திற்கு இசைந்தாரென்பதும்,கருமசரீர வாழ்க்கையில் மேலும் கருமத்தொடர்பு எற்படாதபடிதடுத்தாட்கொள்ள வேண்டுமென்று வரம் வேண்டிப் பெற்றுத் திருவெண்காடராகிய பட்டினத்துப்பிள்ளையார், காவிரிப்பூம்பட்டினத்தில் சிவபத்திச் செல்வராக விளங்கிய தனவணிகப் பெருந்தகையார் சிவநேசச் செட்டியாருக்கும் அவரது அருந்தவமனைவி ஞானகலாம்பிகைக்கும் பிள்ளையாய்ப் பிறந்து வாழ்ந்திருந்தாரென்பதும் அறிந்துகொள்ளத் தக்கனவாம்.

திருக்கயிலாயத்தில் சிவபெருமானுக்குத் தோழரென்று பாராட்டப்பெறுபவர் இருவர். ஒருவர்சுந்தரமூர்த்திசுவாமிகள். மற்றொருவர் குபேரனர். இவர்களை முறையே கல்வித்தோழரென்றும் செல்வத் தோழரென்றும் சிவப்பிரகாச சுவாமிகள் ஏத்துவார்கள். இவர்கள் இருவரது விருப்பமும் பூவுலக வாழ்க்

கையில் உண்டாக அதற்கு அநுமதித்த ஆண்டவன், அவர்கள் வேண்டியபடியே ஒருவரைத் திருமண நாளிலும், மற்றொருவரை மைந்தனாக வந்தும் தடுத்தாட்கொண்ட செய்தி நினைவுகூர்தற்குரியதாகும்.

இவ்வாறாகக் கயிலையை விடுத்துக் காசினியிற் றோன்றிய இவ்விரு பெருமக்களும் முறையே ஏழாந் திருமுறை, பதினொராந் திருமுறைகளின் ஆசிரியர்களாய்ச் சிவநெறிக் கருவூலங்களாக விளங்குகின்ற செந்தமிழ்ச் செய்யுட்களைவழங்கி நம்மை ஆட்கொண்டுள்ளார்கள். பதினொராந் திருமுறையிலுள்ள பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடல்கள் அனைத்தும் சிவபரத்துவத்தைத் தெளிவுறுத்துவனவாய்ச் சொற்சுவை பொருட்சுவை மலிந்து விளங்குகின்றன.

சிவஞானந் தலைப்பட்டு இறைவனோடு ஒன்றி இன்புறும் பேற்றை உயிர் அரிதிற்பெறும். அதனைப்பெற்ற உயிரும் ஆண்டவனும் ஒன்றியிருக்குநிலையை உலகியலில் ஒத்த அன்பினாலும் பண்பினாலும் ஒன்றி மகிழுந்தலைவன் தலைவியர் நிலையோடு ஒப்பிட்டுப் பேசுவர் சான்றோர். இவ்வாறு இறைவனை அகத்திணையில்தலைவனுக்கிப்பொருளை அறிவுறுத்துவது 'கடவுள் மாட்டு மானிடப்பெண்டிர்நயந்த பக்க'மென்று சொல்லப்பெறும்.

தெருவிலே உலாவருகின்ற தலைவனைக்கண்டு காமுற்று அவனுக்கு மனம் கொடுத்து அவனைக்கூடக்கருதிய மகளிர், அக்கூடல் நிகழுதற்குச் சாதனமாக முயலுகின்ற முயற்சிகள் பல வகைப்படும். அவற்றின்விரியைத் தமிழ்ப்பிரபந்த வகைகளில் ஒன்றாகிய 'உலா' என்னும் பிரபந்தத்தில் பரக்கக் காணலாம். தலைவனது மனநாட்டத்தைப் பற்றிய செய்திகளில் ஒன்றையேனும் கூறாது, தலைவியரது காமவேட்கையொன்றையே குறிப்பிட்டுச் செல்லுகின்ற உலாப்பிரபந்தம், அகத்திணை ஏழனுள் முதலாவதாகிய கைக்கிளையைப் பொருளாகவுடையது என்று சொல்லலாம்.

உலா நூல்களில் விரிவாக உணர்த்தப்பெறுகின்ற பெண்பாற் கைக்கிளைப் பொருளைஆசிரியர் பட்டினத்துப்பிள்ளையார் இவ்வெண்பாவில் சுருங்கக்கூறி விளங்கவைக்கிறார். தில்லைப்பதி

யில் கூத்தப்பெருமான் ஆடுகின்ற இடத்திற்கு அம்பலம் என்று பெயர்- 'அம்பலம்' என்பது வெளிஇடம். ஆண்டவன் ஆடுவது வெளியிடத்திலேதானென்றாலும் அவனை யாரும் அறிந்தவரிலர். 'மன்றுளே மாலயன் தேட, ஐயர்தாம் வெளியே ஆடுகின்றாரை' என்பது சேக்கிழார் பெருமான் திருவாக்கு.

அவ்வாறு யாருமறியாத பெருமையை உடையவனாயிருக்கின்ற ஆண்டவன், அடியார்களிடம் வைத்த பெருங்கருணையால் ஆனேறு ஏறி யாருங்காண உலாவருகின்றான். அவனையே இடைவிடாது நினைந்து அவனுக்கே காதலாகிக் கசிந்துருகி நிற்கின்ற தலைவி அவனது திருவுலா தான்வாழுந் தெருவகத்தே நிகழ வேண்டுமென்று விழைகின்றாள். அதற்கு வழியென்ன? அவனைத் தாங்கிச் செல்லும் ஆனேற்றைச் சிநேகம் பிடித்து அதன் உதவியால் தன் தெருவிற்கு அவனை வரும்படி செய்யலாம் என்று நினைக்கிறாள். எனவே, அதனை வேண்டி இரக்கின்ற பொருள் இப்பாடலிற் காணப்பெறுகின்றது.

'செய்ய சடைமுடியென் செல்வனையான் கண்டெனது, கையறவும் உண்மெலிவும் யான் காட்டப், பையவே, காரேறு பூஞ்சோலைக் காளத்தியாள்வார்தம் போரேறே யித்தெருவேபோது' என்ற கைலைபாதி காளத்திபாதியந்தாதிச் செய்யுளை இந்தச் செய்யுளோடு ஒப்பிட்டுக் காணலாம்.

ஒருசெயலால் யாருக்கும் எவ்விதத் தீங்கும் வாராது ஒருவருக்காவது சிறிதளவு நன்மை வருமாயின் அச்செயலைச் சான்றோர் செய்தே தீருவர். உலாவருகின்ற இறைவனைத் தலைவியின் தெருவகத்தில் தாங்கிச் செல்வதால் யாருக்கும் எந்தக்கேடும் இல்லை. ஆனால் தலைவியும் அவளைப் போன்ற பக்குவிகள் பலரும்அதனால் நலமடைவார்கள். ஆகவேதான் 'அழிவுண்டே' என்றும் 'நன்றன்றே' என்றும் தலைவியின் கூற்றாய் வினாக்கள் எழும்பின,

'தில்லைமன்றைப் பொலிவித்த கோமான்' என்பது கூத்தப் பெருமானது அலகில் சோதியை அறிவுறுத்தி, அவனையின்றி அமையாத பெருஞ் சிறப்பைப் பைப் புலப்படுத்திக்கொண்டிருக்கிறதல்லவா?

சைவாலயங்களில் சம்ஸ்கிருத அர்ச்சனையே வேண்டும்.

சித்தாந்த பண்டித பூஷணம் ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை

(முன்தொடர்ச்சி)

அப்படி எத்தனைபேர் பாடுகின்றனர்? கூடுமாயின் பாடும் பழக்கமுடையாருள் ஆயிரவருக்கு ஒருவ ரிருவர்தா னிருப்பரெனக் கொள்ளலாம். இசைத் தட்டை மந்திரங்களின் உச்சரிப்புக்குச் சிபார்சு செய்கிற நவீனர் அப்படியே அவ்வொன்றிரண்டு பேரைக்கொண்டு அப்பாடல்களை இசைத்தட்டில் அமைத்து விட்டால் அவற்றின் ஆற்றலும் உலகமெல்லம்விளங்கிவிடும்பிறகு ஓதுவாமூர்த்திகளுக்குஆலயங்களில்வேலையில்லைஅவரையெல்லாந் துரத்திவிடலாம். ஆகவே அத்தட்டுக்கும் அவர் சிபார்சுசெய்க. தமிழர்ச்சனைக்குக்கூட அத்தட்டைக்கொண்டு பாடவைக்கலாம். அவ்வர்ச்சனைப் பக்தர் மிருதங்கம். சுதிப்பெட்டி, தாளம் முதலிய வற்றைச் சுமந்துகொண்டு தெருத்தெருவாய்த் திரியவும், ஆலயங்களுக்குள்ளே புகுந்து இசைநயமின்றி இரைச்சல் போடவும் வேண்டாம். அத் தட்டுப்பாட் டர்ச்சனைக்கும் அவர் சிபார்சு செய்க. பூவை யெடுத்துச் சாமிமீது போடுமோ ரெந்திரத்தையும் அவர் தம் அகன்ற புத்தியால் விரைந்து காண வேண்டும். அதுவும் அவ்வர்ச்சனைக்குப் பயன்படும். அதனையும் அவர் சிபார்சு செய்க. அவ் வெந்திரமூல பக்தியால் அவர் வாழி. ஆனல் சைவசமயம்என்னசொல்கிறது? அதைச் 'சொல்லும் பொருளுமே தூத்திரியு நெய்யுமாய், நல்லிடிஞ்சி லென்னுடைய நாவாகச்-சொல்லரிய, வெண்பா விளக்கா வியன் கயிலை மேலிருந்த, பெண்பாகர்க் கேற்றினேன் பெற்று' என்ற திருமுறையிற் காண்க. அதில் தூய சொல்லாகிய தூய திரியை என் நாவாகிய அகலில் இட்டு என்கிறார் ஆசிரியர். 'வாயே வாழ்த்து', 'நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே' எனவுந் திருமுறை சொல்லியது. ஆகவே நாக்கால் உச்சரிப்பவரே ஆக்கம் பெறுவர். மந்திரங்களைச் செவ்வையாக உச்சரிக்கத்தெரியாவிட்டால் பழகிப் பழகி நன்ருக உச்

சரிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். அதை விட்டு 'கடைக்குச் சோம்பிச் சிற்றப்பன் வீட்டிற் பெண்கேட்டான்' என்ற பழமொழிக்குச் சைவமக்கள் இலக்காக விரும்பார். நவீனருடைய தட்டுமுறையினுல் மந்திரங்களது உச்சரிப்பின் ஆற்றலே உலகம் விளங்கிக்கொள்வது பிறகு ஆகட்டும். முதலில் அவர் விளங்கிக்கொள்வாரா? ஆமெனின் அவரும் வாயினுல் உச்சரித்தேயாகவேண்டும். அர்ச்சகர் நமக்குத் தேவையில்லை என்கிருரவர். அவருடைய அர்ச்சனைக் கொள்கை பக்தியை யுண்டாக்கவா வந்திருக்கிறது? இல்லவேயில்லை. அர்ச்சகரையும் சம்ஸ்கிருதத்தையும் ஆலயங்களிலிருந்து துரத்தவே அது தலையெடுத்திருக்கிறது.

'மந்திரங்களெல்லாம் ஆரியத்திலேயே நின்று நிலாவுகின்றன. தமிழில் மந்திரநூலுங் கிடையாது, தமிழ் எழுத்துக்கள் மந்திரங்களைச் சொல்லும் ஆரியவெழுத்துக்களது மாத்திரை பெற்றுமில' என்றது திருநான்மறை விளக்கஆராய்ச்சி. அதற்காதாரம் தொல்காப்பியம். 'எல்லா வெழுத்தும் வெளிப்படக் கிளந்து, சொல்லிய பள்ளி யெழுதரு வளியிற், பிறப்பொடு விடுவழி யுறழ்ச்சி வாரத், தகத்தெழு வளியிசை யரிறப நாடி, யளபிற் கோடல் அந்தணர் மறைத்தே, யஃதிவ ணுவலா தெழுந்துபுறத் திசைக்கு, மெய் தெரி வளியிசை யளவு நுவன் றிசினே' என்ற அத்தொல்காப்பியச்சூத்திரங்காண்க. இசை இரண்டுவகைப்படும். அவற்றுள் ஒன்று அகத்தெழு வளியிசை யென்பது; அவ்வோசையானது அந்தணர் ஓதும் வேதத்திலுள்ளது, தமிழிலில்லை; ஆகலின் அதன் கூறுபாட்டை நான் இந்நூலிற் சொல்லவில்லை; இன்னென்று புறத்திசை மெய்தெரி வளியிசை யென்பது; அதுதான் தமிழுக்குரியது; ஆகலின் அவ்வோசைகளின் மாத்திரைகளை நான் இந்நூலிற் கூறுகின்றேன் என்று அவ்வாசிரியர் சொல்லுகின்ருர். நவீனர் அந்தப் பிரமாணத்தை ஏற்பாரா? மாட்டார். ஏன்? அவருக்கு அவரே பிரமாணபுருஷர்.

திருத்தம்

மலர்25, இதழ்1, பக்கம் 6, பத்தி2, எண்9, வரி6இல் 'தமிழொலிக்கு' என்பதையடுத்து 'முண்டு, இல்லையென்பது உண்மையாயின்அது தமிழொலிக்கு' என்பதைப்புகுத்திவாசிக்க.

உ
சிவமயம்
பாலரூவாயர் துணை



அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

செட்டிநாடு

மன்மத ஐப்பசி 17

கமலை ஞானப்பிரகாசர்

தருமையாதீனத்தை நிறுவிய முதற்பெருங் குரவராகிய குருஞான சம்பந்த மூர்த்திகளுக்கு ஞானோபதேசம் புரிந்தவர் கமலை ஞானப்பிரகாச தேசிகர். புறச்சந்தான குரவருள் நான்காமவராகிய உமாபதி சிவாசாரிய சுவாமிகளிடம் உபதேசம் பெற்றவர்களுள் அருணமச்சிவாய தேசிகரும் மச்சுச்செட்டியாரும் முன்னணியிலிருப்பவர்கள்.

அருணமச்சிவாய தேசிகர் பரம்பரையில் திருவாவடுதுறை ஆதீனமும் மச்சுச்செட்டியார் பரம்பரையில் தருமபுரஆதீனமும்தோன்றிச் சிவநெறிச் செங்கோல்ஆட்சிசெய்து வருகின்றன. மச்சுச்செட்டியார் சீகாழியிலிருந்த வேளாண் குலத்தவர் இவர் பிரபஞ்சத்தைப் பார்க்கக் கூடாதேன்று மச்சிலேயே இருந்தபடியால் இவருக்குஇப்பெயர் வந்ததென்று கூறுவர். இவர் செய்ததாக 'ஞானபூசைத் திருவிருத்தம்' என்று ஒரு நூல் உளது. இவரிடம்கங்கை மெய்கண்டார் என்பார் உபதேசம் பெற்றார். அவரது மாணவர் சீர்காழிச் சிற்றம்பலநாடிகள்.

இவர் காவிரிக் கரையிலுள்ள சித்தர் காட்டில் தத்துவப்பிரகாசம் செய்தருளிய தத்துவப்பிரகாசர் முத

லான 64 மாணவர்களுக்கு அருளுபதேசம் செய்து அவர்களோடு சமாதிகொண்டார். இவர்உடம்பை வெறுத்து, காலில் பழுதை கட்டிக் கொண்டு இருந்ததால் பழுதைகட்டிச்சிற்றம்பலநாடிகள் என்றும் அழைக்கப்பெற்ருர். இவர் செய்த நூல் துகளறுபோதம். இவர்பால் திருத்துருத்தியில் எழுந்தருளியிருந்து பல மாணவர்களுக்கு அருள் செய்த பழுதைகட்டி ஞானப்பிரகாசர் உபதேசம் பெற்ருர்.

பழுதை கட்டிஞானப்பிரகாசரின் மாணவர் கமலை ஞானப்பிரகாசர். திருவாரூர்ப் பூங்கோயில் சித்தீச்சரத்தில் எழுந்தருளியுள்ள தெட்சிணுமூர்த்தி கமலைஞானப்பிரகாசருக்குப் பிரத்தியட்சமாய் இருந்தாரென்று வரலாறு அறிவிக்கின்றது. தெட்சிணுமூர்த்தியின் ஆணைப்படி தான் மதுரை பொற்ருமரைக்குளத்தில் சிவலிங்கத் திருவுருவத்தைப் பெற்றுத் திருவாரூர் வந்த குருஞானசம்பந்தமூர்த்திகளுக்கு ஞானப்பிரகாசர் ஞானுபதேசம் செய்தருளினுர்.

இவர் செய்தனவாகச் சிவானந்த போதம், அத்துவாக்கட்டளை, பிராசாதக்கட்டளை, சிவபூசைஅகவல், முதலிய நூல்கள் வழங்குகின்றன. குருஞானசம்பந்தமூர்த்திகள் கமலை ஞானப்பிரகாசரைத் தலைவராகக் கொண்டு அருளியநூல்கள்இரண்டு. அவை ஞானப்பிரகாசமாலையும் நவரத்தினமாலையும் ஆகும். இவையன்றி ஞானப்பிரகாசர் வணக்கமாக இவர் கூறிய வேறுசிலதனிப் பாடல்களும் உள்ளன.

எல்லாம்வல்ல இறைவனே அருட்குருவடிவந்தாங்கி வந்து அடியாரை ஆட்கோள்கின்ருன் என்னும் பேருண்மையைப் பல இடங்களில் குருஞானசம்பந்தமூர்த்திகள் ஞானப்பிரகாசரை முன்னிலைப்படுத்தி அறிவுறுத்தியுள்ளார்கள். பேரருட் குரவராகிய ஞானப்பிரகாசரது நினைவு நாள் **5-11-55** சனிக்கிழமையாகும். அன்று அப்பெருமானை நினைந்து வழிபட்டு நல்வாழ்வு அடைவோமாக.

தேவகோட்டை

கந்தர்சஷ்டி விழாக்கழக 10-வது ஆண்டு மகோத்ஸவம் 14-11-55 முதல் 22-11-55வரை நடைபெறஇருக்கின்றது. சொற்பொழிவு நிகழ்ச்சிகளிலே கிருபானந்தவாரியார், கி வா ஜெகன்னாதன், காசிகாநந்தஞானாசாரியார், பாலகவி, இராம மீனாட்சி, ஆறுமுகநாவலர், முத்துச்சாமிப்புலவர், கிரிதாரிபிரசாத், ராய சொ அவர்களும், இசை நிகழ்ச்சிகளிலே சென்னை எல் பாலசுந்தர் கல்யாண கிருஷ்ணபாகவதர், மதுரை சோமு, புதுக்கோடு கிருஷ்ணமூர்த்தி, எம் எஸ் அனுராதா, பாலக்காடு மீனாட்சி குரு ராமலிங்கம், ஆலத்தூர் சகோதரர்கள், எம் எல் வசந்தகுமாரி, பாலக்காடு டி எஸ் மணிஐயர், மாயவரம் கோவிந்தராஜபிள்ளை, கும்பகோணம் ராஜமாணிக்கம்பிள்ளை, பி கே வி சர்மா, டி ஸ்வாமிநாதபிள்ளை, இன்னும் பல வித்துவான்களும் கலந்துகொள்வார்கள். விசேஷ மேளமும், நடனமும் பால தண்டாயுதபாணிக்குலெக்ஷார்ச்சனை முதலியனவும் நடைபெறும்.

ஸ்ரீ காசிமடத்தின் நன்கொடை

பழைய சாபனாசம் அகஸ்தியர் கோயிலில் ஒரு மண்டபம் கட்டுவதற்காக திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் ரூ 3500 நன்கொடை வழங்கியிருக்கிறார்கள். தொகை 14-10-55ல் அகஸ்தியர் கோயில் தர்மகர்த்தா திரு சிவசைலம்பிள்ளை அவர்களிடம் சேர்க்கப்பெற்றது.



திருக்கடுவாய்க்கரைத் தேன்புத்தூர்த் திருப்பதிகம்:- தருமபுர ஆதீன வெளியீடு எண் 354. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் 15-10-55 மாதஜன்ம நட்சத்திர வெளியீடு. ஆதீனத் தேவார பாடசாலை ஆசிரியர் திரு R. வேலாயுத ஓதுவாமூர்த்திகள் எழுதிய தலச் சிறப்பு குறிப்புரையுடன் கூடியது.

சித்தாந்த சைவ மாநாடு

கடலூர் அக் 31-

திருவாவடுதுறை ஆதீனத்தின் நான்காவது சித்தாந்த சைவ மாநாடு 26ம் தேதி மாலை திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டார் சன்னதியில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் முன்னிலையில் வெகுசிறப்பாக நடைபெற்றது. சென்னை முன்னாள் மேயர் திரு எஸ் இராமசாமி நாயுடு மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

காலையில் மெய்கண்டதேவ நாயனாருக்கு விசேட அபிடேக ஆராதனை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகளால் செய்யப்பட்டு மகேசுர பூசையும் நடைபெற்றது. அபிடேக காலத்தில் ஆதீனத்துநாதசுர வித்துவான் திரு, நடராச சுந்தரம் குழுவினரால் மேளவாத்தியம் நடைபெற்றது.

ஆதீனத் தலைவர், மாநாட்டுத் தலைவர் திரு, இராமசாமிநாயுடுவுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

திரு, எஸ் இராமசாமிநாயுடு தனது தலைமையுரையில், திருவாவடுதுறை ஆதீனம் சமயத் தொண்டில் செய்துவரும் தொண்டைப்பாராட்டினர்.

திரு ச தண்டபாணி தேசிகர் 'திருஞானசம்பந்தரும், மெய்கண்டாரும்,' என்பதைப்பற்றியும் திரு தே அ சீனுவாசாச்சாரியார் 'திருமுறைகளும், சிவஞானபோதமும்' என்பதைப் பற்றியும், திரு ஆறுமுகநாவலர் 'திருமந்திரமும்,சிவஞானபோதமும்' என்பதைப்பற்றியும் விரிவுரையாற்றினர்கள்.

'சிவஞானபோதம் பாண்டிப் பெருமாள் விருத்தி' என்றநூலை வெளியிட்டு இலவசமாக மாநாட்டில் வினியோகிக்கப்பட்டது.

தங்கம், வெள்ளி

மதுரை நவ 1-

பாட்லா	95	8	0
சவரன்	62	0	0
ரெடிமேட் தங்கம் (சவரன் எடை)	60	8	0
வெள்ளி 100தோலா	170	0	0
வெள்ளி 1தோலா	1	11	6

★ மெய்மை பொய்படுமா ? ★

சிவசூரியநாராயணபிள்ளை இட்டமொழி

'ஆகமமாகி நின் றண்ணிப் பான்றுன் வாழ்க' எனவும், 'ஆரணமாகமங்களருளினு அருவு கொண்டு, காரண னருளாளுகிற் கதிப்பவ ரில்லை யாகும்' எனவும், 'இறைவன் சொன்ன விதியறம்' எனவும் 'மறைகளீசன்சொல்' எனவும் 'வேதமோடாகம மெய்யா மிறைவனூல்'எனவும் 'உலகியல் வேத நூலொழுக்க மென்பதும், நிலவு மெய்ந் நெறிசிவ நெறிய தென்பதும்' முதலாகக் கூறுவன பல வாற்றுனும் சிவபெருமான் திருவாக்கே வேதசிவாகமம் என்பதைக் கடைப்பிடித்தொழுகல் நலமனைத்திஹும் மேலாம் நலம் என்பதை அறிந்தும்அறியாதார் போல் திருச்செந்தூர் ஆலய கைங்கர்யஞ்செய்யும் ஆதிசைவர் கூட்டுவித்த ஸ்ரீ ஆலாலசுந்தரர் சிவாசாரியசங்கம் 15-9-55 செட்டிநாடுவார இதழில் 'விநாயகசதுர்த்தி முதலியன' என்பதை வெளியிட்டது. அதிலுள்ளதை எளிதிலறிந்திட 29-9-55 செட்டிநாடு வார இதழில் 'உற்சவம்வேறு விரதம் வேறு' என ஓர் வியாசம் சங்கக் கூற்றைக்கண்டித்தும்தொன்மை முறைகளைச் சிறப்பித்தும் யாம் வெளியிட்டோம். அது கண்ட சங்கம் தபால்மூலம் ஒரு கடிதம் எமக்குத் தந்திருக்கிறது. அதிற் சங்கம் வேடிக்கை பல காட்டும் வினுவொடு விடையும், மேலும் விடைவேண்டுமென மீண்டுமீண்டும் வேண்டுதலே நிறைத்துமிருக்கிறது. அது எவ்வாறுயிருப்பினும் உலகத்தாருண்டென்பதை இல்லையென்றுது, உலகத் தோடொட்டிக்கூறும் உண்மையுரையில், அந்தச் சங்கமோ அல்லது அதற்கு மேலான சங்கங்களோ, எதுவரினும் என்னதான் செய்திடக்கூடும் - அணுவும் அசைத்திட முடியாது? அப்படியாவதால் அந்தச் சங்கத்தின் ஊக்கத்தை நாம் தடை செய்வானேன்? என அதன் வினுவையும் எம் விடையையும் இதன் தொடர்பாய்த் தருகின்றேம்.

சங்கம் தந்த வினு

'நமது ஆலயங்களில் திதியும் நக்ஷத்திரமும் கொண்டு உத்ஸ

வங்கள் நடந்து வருகின்றன. இதில் எவை எல்லாம் சாந்திரமானம் எவைஎல்லாம் சௌரமானம் என்று விரிவாக அந்தந்தப் பேதங்களுடன் வாக்கியங்கள் இருந்தால் வாக்கியங்களுடனும் அதில்லாவிடில் விஷயமட்டிலுமாவது எழுதியனுப்பும்படி அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்'

இதில் வாக்கியங்கள் இருந்தால் என எழுதியதும், அதில்லாவிடில் என எழுதியதும் சங்கத்திற்குப் பெருமையா? அல்லது சிறுமையா? என்பதைச் சங்கமே அறிந்துகொள்ளட்டும். ஆனால் யாமென்னதென்னுஞ் செருக்கும், ஆதிசைவர்தாமென்ற எண்ணமுங் கொண்டு சங்கம்வித்தகம்பேச வேண்டாம். சங்கத்தின் ஆகமஅறிவும், பயனில் சொற்களும் சங்கக் கடிதத்தில் வினாத்தொடர்பாய் வர்ணித்திருப்பதைப் பல பெரியார் பார்வைக்குத் தருகின்றோம். 'சௌரமாசே விருதம் குர்யாது சாந்திரமானே நகாரயேது' என்றபடி சௌரமாசத்தில் விரதங்களைச் செய்ய வேண்டுமென்றும் சாந்திரமானத்தில் கூடாதுஎன்றும் சிவாகமம் கூறுகிறது'எனச் சங்கம் கொட்டிக் கவிழ்த்துவிட்டது. தன் வினாவிற்குத் தான் கொண்டதேவிடைஎனக்குறித்த சங்கம் எமது விடையை மீண்டு மீண்டும் வேண்டுவானேனோ? அதே கடித இறுதியில் 'அதிக வேலை கொடுத்ததற்குச் சிரமம் பாராட்டாமல் எங்கள் பேரில் அன்புகொண்டு தங்களின் பதிலை எதிர்பார்க்கிறோம்' எனச் சங்கம் முடித்துவிட்டது. அந்தக் கடிதத்தில் அன்பு அடுத்தடுத்துத் தொடுத்துவந்ததைக் கண்டதும் பொய்த் தவவேடங்கொண்டு புகுந்த முத்தநாதன் சரிதம் ஞாபகம் வந்தது.

வினாவைத்தேருட்டும் விடை

காரணாகமம் சிவராத்திரி விரதப்படலத்தில் 'ஸௌரமாசே வ்ரதம் குர்யாத் சாந்ரமானே நகாரயேத், ஸௌரமானம் யதா சம்போ சாந்திர விருத்தி தினம் ததா' பொருள்: சிவராத்திரியைச் சௌரமானப்படியே கொள்ளவேண்டும், சாந்திரமானப்படி கொள்ளக்கூடாது. சௌரமானம் சிவபெருமானுக்கு எவ்வளவு விசேஷமுடையதோ அவ்வளவு சாந்திரமானமும் விசேஷமுடையது எனக் கூறுகிறது. இதையுணராமலும், சிவராத்திரிக்கு விதிக்கப்பட்ட இச்சுலோகத்திற் பாதியைப் பிடுங்கியே

தும், தப்புந்தவறுமாகக்குறித்து எல்லா விரதங்களுக்கும் வலிந்தி ழுத்துக்கொண்டும், பிரமாணம் போலாக்கி ஏமாற்றவருதல் சங் கச் சிறப்பிற்கு அழகாகுமா? திவான்பகதூர் எல். டி. சுவாமிக் கண்ணுப்பிள்ளை எம் ஏ-பி எல், சி ஐ இ, ஐ எஸ் ஓ, எவ் எம் யு என்பார் இந்தியக் கிறிஸ்தவர் ஆங்கிலத்தில் எழுதியதின் பெயர்ப்பு, மாகபகுள சதுர்த்தசி மகாசிவராத்திரி. மாகமாசத்திற் குச் சிலமாதங்களுக்கு முன் அதி மாதம்வந்தால் சிவநாம யோகம் சிவராத்திரியன்றுசேரும்' என்று கூறுகிறது. இவர் அறிவாராய்ச்சியி னும்ஆதிசைவர் சங்க அறிவா ராய்ச்சி மாறுபடின் உலகர்நகைப் பிற்கிடமாகுமே? அஃதோடும் 'குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின் மதிக்கண் மறுப்போலுயர்ந்து' எனவாம் வள்ளுவர் வாய்மைக்கும் இலக் காகுமே. இன்னனவான சங்கம் சிவராத்திரியைச் சௌரமானப் படியே எமது பஞ்சாங்கத்தில் யாம் குறித்துவருவதை அறியா மற் கொடுத்த வினுவிற்கேற்ற விடை கண்டபின்வருந்த வேண் டாம்.

முடிவுரை

விரதகால மாற்றங்களை அடி யோடறுத் தழிக்கவும், விரத காலங்களின் தொன்மைகள் ஸ்திரப்படுத்தவுமே எமது கலை மகள் வாக்கியபஞ்சாங்கம் செய லாற்றிவருகின்றது. என்பதை அதன் 48-49ம் பக்கங்களில் கண்ட பல பெரியார்கள் அதைக் கைக்கனிபோலாதரித்து வருகி றார்கள். ஆனதால் இனி எவரும் விரதகால மாற்றங்களுள் தலை கால் நீட்டாதிருத்தல் சாலவும் நன்று. ஆதிசைவர்சங்கத்தீர்! நீங்களும் மேலாகிய தவத்தோர் வேடந்தனைப்பூண்டிங் காகாதன புரிந்ததே போதும், இனி ஆக மங்களை அவலமாக்காமல் மெய் நெறிகளைக் கடைப்பிடித்துப் 'பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி' மாறு பாடின்றி யொழுகிவரப்பணிகின் றோம்.

குறிப்பு:- இக்கட்டுரையாளருக் குப் பன்னிரண்டு வினுக்களை எழுப்பி, அவற்றிற்கு விடை வேண்டிய வேண்டுகோளொன் றை நமது இதழில் வெளியிடும் படி சங்கத்தார் நமக்கும் அனுப் பியுள்ளார்கள் அவ்வெல்லா வினுக்களுக்கும் ஏற்ற விடைகள் இதில் உள்ளனவாதலின், வினுக் களைத் தனியாக வெளியிட வில்லை :-ஆசிரியர்

தொடர்கதை:

வாழ்க்கைப் பாதையில்...?

அழ. கருப்பையா

அன்று சென்னைக் கடற்கரையிலே, 'விழுந்தது தங்கத் தூற்றல், பழங்கால இயற்கை செய்யும் புதுக்காட்சியைப் பருகு' என்றீர்களே! அன்று அக்காட்சி இன்பம் தந்தது. நாம் இணைவதற்குப் புதுவழி வகுத்துத் தந்தது, இன்று இக்காட்சி இன்னல் தருகிறது'

'அன்பினில் கலந்த ஆருயிரே! எதிர்காலத்தைப் பற்றி ஏன் ஏக்கம் கொள்கிருய்? இருக்கின்ற இன்பநேரத்திலே துன்பத்தை ஏன் எண்ணுகிருய்? இன்பத்தின்எல்லையை அடைந்துவிட்டபிறகு துன்பத்தின் தொடர்கதையை ஏன்|தொடங்குகிருய்? வாழ்க்கைப்பாதை பசுஞ் சோலைக்கு வழிகாட்டும் பளிங்குச் சாலையல்ல; பாலைக்கு வழிகாட்டும் மணற்பாதை. முயன்ருல் மணற்பாதையும் பளிங்குச் சாலையாகமாறும். அத்தான் அருகிலிருக்கும்போது ஏன் அஞ்சுகிருய்?'' என்ருன். அப்பொழுது உண்டானபேரிடியைக் கேட்ட கிரிஜா ராமனைத் தைக் கட்டித் தழுவினுள். படகு உடைந்து பலகைகள் நாலா பக்கமும் சிதறின. படகோட்டி நீரினுள் பாய்ந்தான். அப்பொழுது கிரிஜா போட்ட சப்தம் இடியின் முழக்கத்தை அமுக்கி மேல் கிளம்பியது. தாய் தந்தையரைப் பிரிந்து இன்பம் காணவந்த இளந்தம்பதிகளைத் துன்பம் தொடர்ந்துவிட்டது. நாமொன்று எண்ண நடப்பது வேருகிவிடுகிறது.

20

சென்னை மருத்துவக் கல்லூரியிலே சிகிச்சை முறைகளை விளக்க மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சி நடந்துகொண்டிருந்தது. சேகர் ஒரு மேஜையின் ஓரத்திலே நின்றுகொண்டிருந்தான். அவனைச் சுற்றிலும் இருதயத்தின்

அமைப்பு, இரத்தத்தின் சிவப்பணு வெள்ளையணு இவற்றின் அமைப்பு, பற்களின் அமைப்பு முதலியவற்றை வரையப்பட்ட படங்கள் தொங்கிக்கொண்டிருந்தன. மக்கள் ஒருவர் பின் ஒருவராக அட்டையைப்போல் ஊர்ந்து வந்து ஒவ்வொரு காட்சியாகக் கண்டு விளக்கம் கேட்டுச் சென்றனர்.

அக்காட்சியைக் காணுவதற்காகக் காரில்வந்துகொண்டிருந்த மனோகர், கண்காட்சியைக் காணச்சென்றுகொண்டிருந்த பத்மினியைக் கண்டான். 'பத்மினி! எங்குசெல்கிறாய்? நடந்து சென்றால் உன் பட்டுப் பாதங்களின் பாலிஷ் குறைந்துவிடும். நீ என் காரில் ஏறிக்கொண்டால் அழகுராணியைச் சுமந்து செல்லும் ஆசையில் ஆனந்தமாய்ப் பறக்கும். ஏறிக்கொள் காரில். நீ செல்லவேண்டிய இடத்திற்கு உன்னைக் கொண்டுபோய் விடுகிறேன். உன் கண்அசைந்தால் போதும்- உன் காலடியில் இந்தக் காதல்ராஜன் கண்மூடிக் கிடப்பேன்' என்றான்.

No thanks. நீங்கள்சென்று வாருங்கள்' என்று கோபமாகக் கூறினாள் பத்மினி.

'பத்மினி! அடியேன் உன் ஆணைக்காகக் காத்துக்கிடக்கிறேன். கண்மூடிச் செல்கிறாய். எதிர்காலத்தை எண்ணிப்பார். ஏழடுக்கு மாளிகையிலே நீ என் தெய்வமாக நடமாட நான் உன்னைப் பூஜிப்பேன். சரியென்று கூறு. நாளையே நம்மிருவருக்கும் திருமணம். நாளைக்கடத்திப் போட நான் விரும்பவில்லை. இன்றே உன்னை என்னோடு திருமணக்கயிற்றால் இணைத்துக் கொள்கிறேன். தேடி வரும் அதிர்ஷ்டத்தை......'

'வணக்கம் மனோகர்' என்றாள் அங்கு வந்த மங்கை. 'வணக்கம்' என்ற மனோகரனை நோக்கி 'பத்மினியோடு பப்ளிக் ரோட்டிலே காதல்சீன் நடத்துகிறீர்கள்? நன்று! நன்று!' என்றாள் மங்கை.

(தொடரும்)

ஆசிரியர் பாலகவி இராமநாதன் செட்டியாரால் தேவகோட்டை செட்டிநாடுஅச்சகத்தில் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.

உ

செட்டிநாடு

வார இதழ்

மலர்-25 இதழ்-4
மன்மத-ஐப்பசி-24
10-11-55
வியாழன் வெளியீடு
தேவகோட்டை
ஆண்டுச்சந்தா ரூ 4
வெளிநாடு ரூ 7

ஆசிரியர்:- பாலகவி இராமநாதன்செட்டியார்

நற்றிணை-தெளிவுரை

குறிஞ்சி

தலைவன் அடைந்த குறையைத் தீர்ப்பதற்கு உடன்பட்ட தோழி தலைவியிடம் சென்று, அவள் தன் முகம் நோக்கி மகிழ்ந்து வினவுதல் நிமித்தமாக உரையாடுகின்றவள் கூறியது.

சிறுமணி தொடர்ந்து பெருங்கச்சு நிறீஇக், குறுமுகி ழெருக்கங் கண்ணி சூடி, யுண்ணா நன்மாப் பண்ணி யெம்முடன், மறுகுடன் றிரிதருஞ் சிறுகுறு மாக்கள், பெரிதுஞ் சான்றோர் மன்ற விசிபிணி, முழவுக்கண் புலரா விழவுடை யாங்க, ணூரே யென்னுமிப் பேரே முறுநர், தாமே யோப்புர வறியிற் றேமொழிக், கயலே ருண்கட் சிறுமகட், கயலோ ராகலென் றெம்மொடு படலே 220 :-குண்டுகட்பாலியாதனார்

பனை மடலினால் உணவுண்ணாத குதிரையைச் செய்து அதற்குச் சிறிய மணிகளைக்கட்டிப் பெரிய கச்சையைப் பூட்டிக் குறிய எருக்கம்பூமாலையைச் சூடி ஒரு தோன்றல் அதில் ஏறியிருக்க அதனை யீர்த்துக்கொண்டு வருகிற தெருவில் எம் பின்னே திரிகின்ற சிறிய குறிய பிள்ளைகளாகிய-நன்றாக இறுகக் கட்டிய குடமுழவில் ஓயாது முழங்கும் திருவிழாவையுடைய அந்த ஊரினே மென்று சொல்லும் இந்தப் பெரிய மயக்கத்தை யுடையவர்கள் உலக நடையை அறிந்திருப்பார்களானால், தேன்போன்ற மொழியையும் கயல்போன்ற மையுண்ட கண்களையுமுடைய நமது இளநங்கைக்கு இத்தோழிமார் அயலாவரென்று எம்முடன் கூறுதல் எவ்வளவு வியப்புடையது? இவ்வாறு கூறுதலால் இவர் பெரிதும் சால்புடையார்போலும்? :-பாலகவி

பசுந்தமிழ் மலர்

பாலகவி

அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே

-:சிவஞானபோதம் 2

உரை:- 'அவையே ஆய்- முதற் சூத்திரத்தில் எடுத்துக் கொண்ட சங்கார காரணனாகிய முதல்வன் கலப்பினால் உடலின் கண் உயிர்போல அவ்வுயிர்களே யாய், தானே ஆய் - பொருள் தன்மையால் கண்ணொளியும் கதிரவனும்போல அவற்றின் வேறு மாய், அவையே தானே ஆய்- உயிர்க்கு உயிராதல்தன்மையால் கண்ணொளியும் ஆன்மபோதமும் போல உடனுமாயிருந்து, ஆணை யில்-ஆணையென்னும் பரியாயப் பெயருடைய தனது சிற்சத்தி யால் வருகின்ற, வினையில்-இரு வினைகளால், போக்கு வரவு புரிய-அவ்வுயிர்கள் இறப்புப் பிறப்புக்களைப் புரியும் வண்ணம், நீக்கம் இன்றி - அச்சிற்சத்தி யோடுபிரிப்பின்றி, நிற்பன்-இருப் பான்' என்பதாகும்.

மெய்கண்டதேவ நாயனார் அரு ளிய சிவஞானபோதஇரண்டாஞ் சூத்திரம் பாச உண்மையை விளக்குவது. ஆணவமலத்தின் உண்மையைப் பதியுண்மை நிறு வுமுகமாக முதற் சூத்திரத்தில் விளக்கிய ஆசிரியர், அவ்வாணவ மலத்தின் சேட்டையொடுங்கு தற்குத் துணைசெய்கின்ற மாயா கன்ம மலங்களின் உண்மையை இச் சூத்திரத்தில் தெளிவுபடுத் துகின்றார்.

காணப்பெறுகின்ற உலகத் தைக் கொண்டு காணப்பெறாத கடவுள் உண்டெனக் கூறி, அவ் வுலகத் தோற்றத்திற்கு முதற் காரணமாகிய மாயையும், துணைக் காரணமாகிய சத்தியின்வழியாய் வருகின்ற கன்மமும் உண்டென் பதை அநுமானப் பிரமாணத் தால் இச்சூத்திரம் அறிவிக்கின் றது.

உலகம் ஒடுங்கி யினின்றும் மீளவுளதாமாற்றை உணர்த்

தவே, முதலும் துணையுமாகிய காரணங்கள் இல்லாதபொழுது, இறைவன் உலகிற்கு நிமித்தகாரணனுதல் எங்ஙனம் என்னும் வினு எழும்பும். கன்மத்தைச் சத்தியால் வரும் துணைக்காரணமென்றது, கன்மம் சடமாதலால் அது சத்தியாலன்றித் தொழிற்படும் ஆற்றல் இல்லாததாதலினுலேயேயாம். எனவே சத்தி ஒரு துணைக்காரணமும் அதனுல் வரும் கன்மம் மற்ருெரு துணைக்காரணமுமென அறிதல் வேண்டும்.

முதலும் துணையும் நிமித்தமுமாகிய மூன்று காரணங்களுள் முதலும் நிமித்தமும் ஒவ்வொன்ருயும் துணை பலவாயும் இருக்கும். மண்ணுகிய முதலும் குயவனுகிய நிமித்தமும் ஒவ்வொன்ருகவும் தண்டுசக்கரமாதிய துணைகள் பலவாகவும் இருப்பதை நாமறிவோம். இது போலவே உலகத்திற்கு மாயையாகிய முதலும் இறைவனுகிய நிமித்தமும் ஒவ்வொன்ருகவும் திருவருட் சத்தியும் கன்மமுமாகிய துணைகள் இரண்டாகவும் உள்ளன.

குயவன் பிறர்பொருட்டாகக் குடத்தைத் தோற்றுவித்தல் போல இறைவனும் உயிர்களின் பொருட்டாக உலகத்தைத் தோற்றுவிக்கின்ருன். அவ்வாறு தோற்றுவிக்கும்பொழுது உடல் இருத்தற்கு உடலினிடத்து உயிர் கலந்து நின்றுஉடலேயாய் நிற்பதுபோல, உயிர்கள் நிலைத்தற்கு உயிர்களிடத்து இறைவன் கலந்துநின்று அவ்வுயிர்களேயாய் இருப்பான் - காணும் தொழில் நிகழுதற்குக் கண்ணுக்குத் துணையாய் நிற்கும் கதிரவன்கண்ணினின்றும்வேருதல்போல, அறிதற்ருெழில் நிகழுதற்கு உயிர்களுக்குத் துணையாய் நிற்கும் ஆண்டவன் அவ்வுயிர்களின் வேருயும் இருப்பான். பொருளைக் காணுதற்குக் கண்ணொளியுடன் உயிரறிவு உடனின்று பொருளிற்செல்லுமாறு போல, உயிர்கள் இன்ப துன்பங்களை நுகருதற்கு, அவ்வின்பதுன்பங்களுக்கு முன்னிலையாகிய விடயங்களில் உயிரோடுகூட அவ்விறைவன் செல்லுதலின் உயிர்களோடு உடனுயும் இருப்பான். இவ்வாறு இறைவன் உயிர்களோடு ஒன்ருயும் வேருயும் உடனுயும் இருந்து ஆணையென்னும் தனது சிற்சத்தியினுற் செலுத்தப்பட்டு வரும்இருவினைகளால் அவ்வுயிர்கள் இறத்தல் பிறத்தல்களை அடையும்படி அவ்வாணையாகிய சிற்சத்தியில் பிரிப்பின்றித் திரோதான சத்தியே வடிவமாய் நிற்பான்.

இறைவன்-சிற்சத்தி சம்பந்தத்தைச் சமவேத சம்பந்தமென்று சொல்லுவர். சமவேதமென்பது ஒற்றுமை. நெருப்புக்கும் சூட்டிற்குமுள்ள சம்பந்தம் சமவேத சம்பந்தமாகும். நெருப்பில் சூடு இருக்குமேயன்றிச் சூட்டில் நெருப்புஇராது. குணத்திற்குக் குணி ஆதாரமாகுமேயன்றிக் குணிக்குக் குணம் ஆதாரமாகாது. அதுபோல இறைவனிற் சிற்சத்தி யிருக்குமேயன்றிச் சிற்சத்தியில் இறைவன் இரான், இவ்வாருகவே 'ஆணையில் நீக்கமின்றி நிற்கும்' என்று சூத்திரத்திற் கூறிய கருத்துச் சிந்தித்தற்குரியதாயிருக்கிறதல்லவா?

இறைவன் ஒன்றினுந் தோய்வின்றிச் சுயம்பிரகாசமாய் நிற்கும் தன்னுண்மையில் சிவமெனவும் உயிர்களோடு ஒன்ருயும் வேருயும் உடனுயும் நிற்கும் தன்மையிற் சத்தியெனவும் ஐந்தொழில் செய்யுந் தன்மையிற் பதியெனவும் பெயர்பெற்று நிற்பான். எனவே அவன் உயிர்களோடு கலந்து நிற்கும் நிலையில், தன்னேடு சமவேதமாயிருக்கும் திரோதான சத்திவடிவாய்ச் சிற்சத்தியிற் பிரிப்பின்றி நிற்பானுதலின் ஆணையில் நிற்குமென்று கூறினர். உயிர்களின் பொருட்டாக இறைவன் திரோதான சத்தி வடிவாகச் சிற்சத்தியிற் பிரிப்பின்றி வெளிப்படாது நிற்பான் என்னும் உண்மையை உணர்ந்து கொள்ளும் பொருட்டே, திருக்கோயில்களில் அம்பிகை வடிவமாகத்திருமேனிகொண்டு அவன் எழுந்தருளியிருக்கின்றுன். இறைவன் உயிர்களோடு கலந்து நிற்கும் தன்மையில் சத்தி என்னும் பெயர் பெறுவதைச் சிவஞான சித்தியார் 'உலகெலா மாகி வேருயுடனுமாய் ஒளியாய்' என்று கூறி அறிவுறுத்தியுள்ளது. இங்கே ஒளியென்பது சத்தி.

இறைவனது ஒன்று-வேறு-உடனுந் தன்மைகளைத் திருஞான சம்பந்தப் பெருந்தகையார் திருவீழிமிழலைத் திருப்பதிகத்தில் 'தாருய், வேருய் உடன் ஆனுன் இடம் வீழிமிழலையே' என்ற பகுதியில் அறிவிக்கின்றுர். உயிர்கள் பலவாதலின் அனையெனப் பன்மையாற் சுட்டிக் கடவுள் ஒருவனே யாதலின் தானென்ற ஒருமைச் சொல்லாற் குறித்தார்.

போக்குவரவு புரிதலாகிய செயல்களெல்லாம் இறைவன் கரணத்தானின்றிச் சங்கற்ப

மாத்திரையாற் செய்வன். கரணத்தாற் செய்வதாயின் செய்யப்படுகின்ற பொருளினும் அப்பொருளைக் கொள்வோரினும் வேருக நின்று செய்தல் வேண்டும். இதனைக் குடத்தினும் குடத்தினைக் கொள்வோரினும் வேருகக் குயவனைக் கண்டு அறியலாம். இறைவன் செயப்படுபொருளாகியபோக்குவரவோடும் அவற்றையுடைய உயிர்களோடும் பிரிப்பின்றி நிற்பவன். உடலோடு பிரிப்பின்றி நிற்கும் உயிர் உடலின் வேருன பிறிதொன்றை அசைப்பதற்கு உடலாகிய கரணம் வேண்டும். உடலை அசைப்பதற்குச் சங்கற்பமே போதும். அதுபோல உயிர்களோடு பிரிப்பின்றி நிற்கும் இறைவனுக்கு அவற்றிற்கு வேண்டுவன செய்யச் சங்கற்பமே போதியதாகும்.

நற்செயல் தீச்செயல்களாகிய இரண்டும் இருவினை யெனப்பெறுமாயினும் இங்கேஇருவினை யென்றது அச்செயல்களையன்று. முன்னைப்பிறவிகளில்செய்யப்பெற்றமுயற்சிகள் செய்தபொழுதே அழிந்தொழியுமாயினும் சூக்கும உருவத்துடன் வெளிப்படத் தோன்ருமல் மாயையில் கட்டுப்பட்டிருக்கும். அப்போது அது புண்ணியபாவமென்று பெயர் பெற்றுச் சிஞ்சிதமென்று அழைக்கப்பெறும். இவைகளே இங்கு இருவினை யெனப்பெற்றன.

வினை சடமாதலால் அது சடப்பொருளான மாயையிற்கட்டுப்படுதலே நியதியும் முறையுமாமென்பதும் சித்துப்பொருள்களாகிய இறைவனிடத்திலோ உயிர்களிடத்திலோ கட்டுப்பட்டிருக்குமென்பது எவ்வாற்ருனும் ஒவ்வாததென்பதும் உணரத் தக்கனவாம். எனவே மாயையின் உண்மை அறியப் பெற்று, அம்மாயையின் தொடர்பால் வரும் கன்மத்தின் உண்மையையும் அறியப்பெறுவதாயிற்று.

மாயையும் கன்மமு மாகிய இரண்டும் சடப்பொருள்களாதலின், அவை தாமே உயிர்களை அடையும் தகுதியுடையனவல்ல. உயிர்கள் சிற்றறிவுடையனவாதலின், தாம்செய்த வினைகளை அறிந்து கொள்ளும் ஆற்றல் அவைகளிடம் இல்லை. ஆகவே பேரறிவனுகிய இறைவனே கன்மமாயா மலங்களை உயிர்களுக்கு ஊட்டுகின்ருனென்பது அறியத்தக்கதாம். இவ்வுண்மை சூத்திரத்தின் கடைசி வரியிற் கூறப்பெற்றுள்ளது.

சைவாலயங்களில் சமஸ்கிருத அர்ச்சனையே வேண்டும்.

சித்தாந்த பண்டித பூஷணம் ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை

(முன்தொடர்ச்சி)

ஆகலின் தம் கொள்கையோடு மாறுபடுமிடங்களில் அவருக்கு எந்நாலும் ஒரு துரும்பே. தொல்காப்பிய மாத்திரந் தப்புவ தெப்படி? ஆனால் 'எழுத்தறியார் கல்விப்பெருக்க மனைத்தும், எழுத்தறிவார்க் காணி னில்லையாம்' என்றது நன்னெறி. ஆகலின் நவீனரின் பாண்டித்திய மெல்லாம் பாமர ரஞ்சிதமே; அதற்கு ஆயுளும் அற்பந்தான். அதை அவர் மறவற்க. வேத சிவாகமோக்த மந்திரங்கள் முதலிய சைவசமய வுண்மைகளை வாயில் வந்தபடி நிந்தித்தும் பரிகசித்துந்திரிபவரைக் 'கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே'

10. 'கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்ய ஒரு போராட்டத்தை நான் ஆரம்பித்தால் அதற்கு ஆதரவு கொடுப்பதாக தி-க, தி-மு-க வைச் சேர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு...கடவுள் வழிபாட்டில் கடவுளிடத்து நம்பிக்கை வந்தது குறித்து மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது' (16-5-55 தினத்தந்தி) என்கிறார் நவீனர். அத்தி-க, தி-மு-கக் கூட்டத்தினர் எதனால் நாஸ்திக ராயினர்? ஆலயங்களில் தமிழர்ச்சனையில்லாமையினாலா? ஆமெனின் நவீனரும் நாஸ்திக ராய்விட்டனரா? அவர் ஆகவில்லையென்றால், அக்கூட்டத்தினர் மாத்திரம் எப்படியரவர்? ஆகலின் அவர் நாஸ்திக ரானதற்கு அவ்வில்லாமை காரணமன்று. அக்காரணம் வேறு. அது கிடக்க, நவீனர் அப்போராட்டத்தை ஆரம்பித்தால் அந்நாஸ்திகர் ஆதரவு தரத்தான் செய்வர். அதனால் தமிழர்ச்சனையும் புகுத்தப்படலாம். ஆனால் அதற்குப் பின்னரும் ஒரு விளைவுண்டு. அது நிச்சயம். என்னை? 'கோவில் பக்தி என்றால் இப்படி இப்படி இருக்கவேண்டுமென்று கட்டுப்பாடுகளைச் சொல்லிவிட்டுக் கோயில்களையே பூட்டிவிடுகிறார்கள்' (2-6-55 தமிழ்நாடு) என்கிறார் நவீனர். ஆலயங்களுக்குச்சென்று பக்திசெய்வது சிவாலய தரிசனம் எனப்படும். அதற்கு விதி (கட்டுப்பாடு) யுண்டென்

பது நிசம். அச்சிவாலய தரிசன விதிக்கடங்கினல் ஆலயங்கள் பூட்டப்பட்டனவாய்ப் போகுமோ? சைவநிலையங்களின் கட்டுப்பாட்டைக் குலைத்து அச் சமய சமூக நாகரீகத்துக்கு உலை வைக்கப் பார்க்கிருரவர். அக்கட்டுப்பாட்டைக் குலைக்கவே தமிழர்ச்சனைக் கொள்கையுங்கிளம்பியது. அதற்கு ஆதரவு தருவதாகச் சொல்லுகிற அந் நாஸ்திகருக்கும் சில விருப்பங்களுள. அவற்றை நவீனரும் அறிவர். அவைதான் யாவை? ஆலயங்களில் சாமிகளுக்குப் பூணூல் வேண்டாம்; ஆண்சாமி, பெண்சாமி, பிள்ளைச்சாமி யென்ற குடும்பமுறைவேண்டாம்; திருக்கலியாண விழாக்களில் பெண்சாமிகளுக்கு ஆண்சாமிகள் போன்று ஆண் சாமிகளுக்குப் பெண்சாமிகளுந் தாலி கட்ட வேண்டும்; ஆண்சாமிகளை ஆடவரும், பெண்சாமிகளைப் பெண்டிருமாக எச்சாமிகளையும் எச் சாதியினருந் தொட்டுப் பூசிக்க வேண்டும்; வழிபடுவோருக்கும் சாமிகளுக்கும் இடையில் தரகர் வேண்டாம்; சாமிகளுக்குக் கள்ளும் ஊனும் நிவேதிக்கவேண்டும்; போலி விழாக்களும், புரியாத விழாக்களும் வேண்டாம்; சாமிகளுக்குச் சப்பைக்கால், தொப்பைவயிறு, மிருக முகம், மூன்றுகண், நான்குகை, ஆறு தலை முதலிய விகாரமான இயற்கைக்கு மாருன அமைப்புக்கள் வேண்டாம்; சாமிகளெல்லாம் ஸினிமா நக்ஷத்திரங்கள் போல் காட்சியளிக்குமாறு அமைக்கப்படவேண்டும் என்பனவும் அன்ன பிறவுமே அவை. அவையனைத்தும் நிறைவேற்றப் பட்டாற்ருன் பக்தி ஓங்கி வளரும். ஆலயங்களுக்கு மக்கள் அதிகமாக வருவர் என அந் நாத்திகருஞ் சொல்வர். தமிழர்ச்சனை விருப்பத்துக்கும் அவ்விருப்பங்களுக்கும் வித்தியாசமில்லை. அதுபோன்று அவையுந் தமிழ்ப் பொதுமக்களின் உள்ளங்களிலிருந்தே எழுந்தன. பக்தி பெருகல், ஆலயங்களிற் கூட்டம் வருதல் என்னும் நோக்கங்களும் அவ்விரண்டற்கும் ஒன்றே. ஆகலின் ஆலயங்களில் அவ் விருப்பங்களையும் நிறைவேற்றுமாறு அவர் நவீனரை ஆஞ்ஞாபிப்பர். அதை நவீனரால் மறுக்க முடியாது. ஏன்? கொடுத்தவருக்கு வாங்கினவர் கொத்தடிமையே. ஆகலின் மறுத்தால் தமிழர்ச்சனைக்கு ஆதரவு கொடுத்த அந் நாஸ்திகர் சீறுவர். அவ்வாதரவை வாங்கின நவீனர் நடுங்குவர். செய்நன்றி கொன்ற பாவமும் அவரைச்சாரும்-

(தொடரும்)

உ
சிவமயம்
பாலரூவாயர் துணை



அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

செட்டிநாடு

மன்மத ஐப்பசி 24

மெய்கண்டார் திருநாள்

சந்தான பரமகுரவராகிய மெய்கண்ட சிவாசாரிய மூர்த்திகள் திருநாள் ஐப்பசிச் சுவாதியாகும். கடல் நீரின் மேல்மட்டத்தில் வாயைத் திறந்து கருக்கொள்ளக் காத்திருக்கும் சிப்பியின் வயிற்றில், ஐப்பசிச் சுவாதிநாளிற் பெய்யும் மழைத்துளி தான் உயர்ந்த முத்தாக விளையுமென்று சொல்லுவார்கள். ஒளியுருவமாகிய சுவாதி நட்சத்திரம் சமயகுரவராகிய ஆளுடைய நம்பிகளையும் சந்தான குரவராகிய மெய்கண்டதேவ நாயனாரையும் நமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கிறது. இவ்வாண்டில் ஐப்பசிச் சுவாதி நாள் **13-11-55** ஞாயிற்றுக்கிழமையாகும்]

கடவுள் உண்டென்பாரும் இல்லையென்பாருமாக மக்கள் இருதிறத்தினர். இல்லையென்பாரிற் சிலர், ஒரோவிடங்களில் உண்டென்று சொல்லவுங் காண்கின்றோம். நமது எண்ணத்திற்குமாறுபட்ட அநுபவங்களும் நம்மிடையே நிகழக்காண்கின்றோமாதலின், அவ்வநுபவங்களை ஊட்டுகின்ற பொருள் ஒன்று உண்டு. அதுவே கடவுள் எனக் கடவுளில்லையென்பார் கூற்றை எளிதில் மறுத்துவிடலாம். கடவுள் உண்டென்று கூறுவாருள் யார் உண்மையானவரென்பதை அறிவதே அறிவுடைமையாகும்.

ஒவ்வொரு பொருளுக்கும் பொதுத்தன்மை சிறப்புத் தன்மை என இரண்டுதன்மைகள் உண்டு. அளவைநூலார் கூறும் பொது இயல்பு, ஒன்றற்குச் சொல்லப் படும் இலக்கணம் பிறவற்றிலும் இருப்பது. சிறப்பியல்பு, ஒன்றற் குச் சொல்லப்படும் இலக்கணம் அதற்குமட்டிலும் இருப்பது. ஆக மத்திற்கூறும் பொதுஇயல்பு. ஒரு பொருளின்தூலநிலை. சிறப்பியல்பு அதன்சூக்குமநிலை. தூலநிலை என் பது பிறபொருள்களோடுதொடர்பு பட்டிருத்தல்,சூக்குமநிலையென்பது எவற்றினுந்தொடர்புறுது தனித்தி ருத்தல்

இந்த முறைப்படி பதிபசுபாசங் களின் பொது-சிறப்பு இயல்புகளை விளங்க உரைத்தவர் மெய்கண்ட தேவநாயனர். சிவஞானபோதமுன் ணறு சூத்திரங்கள் பொதுவதிகார மெனவும் பின்னறு சூத்திரங்கள் உண்மை (சிறப்பு) அதிகாரமென வும் வகுக்கப்பெற்றுள்ளன.

பதிக்குப் போதுஇயல்பு, உயிர்க ளோடு ஒன்ருயும், வேருயும், உட ஞயும் நிற்றல். சிறப்பியல்பு சச்சி தானந்தமாய்நிற்றல். பசுவுக்குப் போதுஇயல்பு கருவிகரணங்களு டன் கூடியிருத்தல், சிறப்பியல்பு அவற்றினீங்கி உடனுய் நிற்கும் சிவமாயிருத்தல், பாசத்திற்குப் போதுஇயல்புகாரியப்பட்டு நிற்றல். சிறப்பியல்புகாரணருபமாய்நிற்றல்.

போதுஇயல்புபிரமாணம்-இலக் கணத்தாலும் சிறப்பியல்பு சாதனம் -பயனுலும் அறியப்பெறுமாதலின் சிவஞானபோதம் நான்கு இயல் களை உடையதாயிருக்கின்றது. போதுஇயல்பு ஆராய்ச்சி அறிவா லும் சிறப்பியல்பு சாதன அறிவா லும் அறியப்பெறும்

இவ்வுண்மைகளையெல்லாம் நம்மனேர் அறிந்து, உண்மைநெறி யில் ஒழுகிச் சிவமாந் தன்மைப் பெருவாழ்வு வாழும் பேறுடைய ராதல் வேண்டுமென்னும் பெருங் கருணையால், ஆசிரியர் மெய்கண்ட தேவநாயனுர் சிவஞானக் கருவூல மாகிய சிவஞானபோதத் திருநூலை நமக்கு அளித்துள்ளார். அதற்குக் கைம்மாருக அவரை, வந்திப்பதும் தனிவாழ்த்துவதும் முடிதாழ்த்து நின்று சிந்திப்பதும், சிவஞான போதத்தைஆசிரியர் முகமாக ஓதிப் பயன்பெறுவதுமன்றி வேறு என்ன செய்யவல்லேம்?

உண்மை அன்பு

மு. சிங்காரம்

பண்டைத் தமிழ் மக்கள் வாழத்தெரிந்தவர்களாக வாழ்ந்தார்கள். பிறர் பாராட்டுதலுக்காக அவர்கள் வாழ்ந்ததில்லை. அன்னியனின் போற்றுதலுக்காக வாழ்வது போல் நடித்ததில்லை. அனைவரும் அன்போடு அறத்தோடு, பணிவோடு வாழ்ந்த காரணத்தால்பொறாமை பூசல், வஞ்சம் முதலான தீய குணங்கள் அந்நாளில் இல்லை. பொதுத் துறையிலே இந்த நிலை என்றால் காதல் துறையைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

தலைவனும் தலைவியும் கண்டு அன்பால் காதல்கொண்டு, பின் இல்லறம் ஏற்பதே அந்நாள்வழக்கம். தலைவனும் தலைவியும் அன்பால் ஒன்றான பின்னர் மணத்திற்கு முன்னரோ பின்னரோ தலைவன் பொருளீட்டச் செல்லுவான்.

பொருளின் சிறப்பறிந்து தலைவன் பொருளீட்டப் புறப்படுகிறான். தலைவியிடம் பொருளின் மேன்மையைக்கூறுகிறான். தலைவியும் பிரியாவிடை கொடுத்து அனுப்புகிறாள். தலைவியிடமிருந்து பிரிந்து வந்த தலைவன் பல இடங்கள் சென்று செல்வம் சேர்க்கிறான். சென்றஇடத்திலே பொன்னையும் ஏனைய பொருள்களையும் பார்க்கும்போதெல்லாம் பொலிவுடைய தலைவியின்நினைவு தான் வருகிறது. வினை ஆடவருக்கு உயிரல்லவா? ஆகவே தலைவியின் நினைப்பைத் தள்ளிச் சில ஆண்டுகள்பொருள் தேடும்முயற்சியில்ஈடுபடுகிறான்.

இங்ஙனமிருக்க; தலைவனைப் பிரிந்தது முதல் பிரிவாற்றாமையால் அவன் சென்ற திசை நோக்கி வழிமேல் விழிவைத்து அவன் வாராமையால் ஏக்கமுற்றாள் தலைவி. விழி வேறு எங்கும் செல்லமறுத்துத் தன் ஒளி இழந்து அழகிழந்து கெட்டது. விரல்கள் தலைவன் சென்றநாட்களை நாட்களாய், வாரங்களாய், மாதங்களாய், வருடங்களாய் எண்ணி எண்ணித் தேய்வுற்றன.

தலைவன் வரவில்லையே என்று தலைவி ஏங்குவதை வள்ளுவர் சுருக்கமாக-ஆனால் விளக்கமாகக் கூறுகின்றார், 'வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர் சென்ற, நாளொற்றித் தேய்ந்த விரல்'

பொது விளம்பரம்.

காரைக்குடியிலிருக்கும் பீனா. மெ. மெ. பழனியப்பசெட்டியார் இதனுல் சகல ஜனங்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறதாவது,

காரைக்குடியிலிருக்கும் ஸ்ரீ மீனும்பிகை அச்சகத்திலிருந்து, நான் வெளியிட்டிருக்கும் திருமண அழைப்புப்போல், என்பெயரை உபயோகப்படுத்தி திருவளர் செல்வி அலமேலுக்கும், கோனுபட்டு ஸ்ரீ ராமசாமிசெட்டியார் மகன் திருவளர் செல்வன் சுப்பிரமணியனுக்கும் 9-11-55ம் தேதி எங்கள் இல்லத்தில் திருமணம் நடைபெறுவதாகவும், அதற்கு நல்வரவைப் பெரிதும் விரும்பி நான் அழைப்பு அனுப்பியதுபோலும் பொருள்படும்படி அச்சிடப்பட்ட அழைப்புப் பிரதி ஒன்று நான் பார்வையிட நேரிட்டது. இந்த அழைப்பு நான் அனுப்பவில்லை. எனக்கு அந்த திருமணத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது. எனக்கும், அந்த அழைப்புப் பத்திரிகையில் கண்ட வெங்கிடாசலஞ்செட்டியாருக்கும் நீண்ட காலமாக நேர்மையும், ஒற்றுமையும் இல்லை. என் சம்மதமும் வேண்டுகோளும் இல்லாமல் அழைப்பு அச்சிட்டிருக்கும் அச்சகத்தின் பேரில் நான் தனி நடவடிக்கை எடுத்துக்கொள்கிறேன். இதை யாவரும் அறியவேண்டி இந்தப் பொதுவிளம்பரம் செய்திருக்கிறது.

பீனா. மெ. மெ. பழநியப்பசெட்டியார்

தோண்டி

போலீசு நிலையத்துக்கு முதன் முதலாகத் தேவகோட்டை தாலுகா நிலைய சப் இன்சுபெக்டராக இருக்கும் திரு, சங்கர அய்யர் சப்இன்ஸ்பெக்டராகநிய மிக்கப்பட்டு ஒரு எட்கான்ஸ்டபிளும் 8 கான்ஸ்டபிள்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

தங்கம், வெள்ளி

மதுரை நவ 8-

பாட்லா	95	4	0
சவரன்	61	12	0
ரெடிமேட் தங்கம் (சவரன் எடை)	60	0	0
வெள்ளி 100தோலா	170	0	0
வெள்ளி 1தோலா	1	11	6

அப்பர் சுவாமிகளுக்கு ஆலயம்

இராமநாதபுரம் நவ 6-

இராமநாதபுரத்திற்குக் கிழக்கே 10 மைல் தொலைவிலிருக்கும் அழகங்குளத்தைச் சேர்ந்த திரு, பரமசிவன்செட்டியாரென்பவர் ரூ 15000 செலவில் அப்பர் சுவாமிகளுக்குத் தனிக் கோவில்கட்டி அண்மையில் கும்பாபிடேகம் செய்தார்.

இராமநாதபுர ஆதி சைவக் குருக்கள்மார் கும்பாபிடேகவிழாவைச் சிறப்புறநடத்தினர்'

ஏராளமான பக்தர்கள் கண்டு மகிழ்ந்தனர்.

சந்தா நேயர்களுக்கு!

ஐயன்மீர்!

கடந்த புரட்டாசி வரையுள்ள தங்கள் சந்தாப்பாக்கிகளைஅனுப்பித்தரும்படி 10-10-55ல் கார்டுகள் எழுதியிருந்தோம். அதன்படி பாக்கியுள்ள தொகையை அனுப்பித்தரும்படி மீண்டும் வேண்டுகிறோம்.

அன்புள்ள,
அமைச்சர்

தேர்தல் தகராறு வழக்குகள்

தேவகோட்டை நவ 1

அண்மையில்நடந்தநகரசபைத் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றகாரைக்குடி 10-வது தொகுதி திரு பழ கருப்பன்செட்டியாரும் இந்நகர் 12வது தொகுதி திரு, சுப தியாகராசனும் தேவகோட்டை நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுத்துள்ளனர்.

எஸ் எஸ் எல் சி வரை இலவசக் கல்வி

விருதுநகர் நவ 6-

விருதுநகரிலுள்ள க்ஷத்திரிய வித்தியாசாலை உயர்நிலைப் பள்ளியின் பொறிஇயல் (எஞ்சினீயரிங்) பிரிவுக்குரிய புதுக்கட்டிடத்திற்குச் சென்னை மாகாணத் தலைமைக் கல்வி யதிகாரி திரு. என் டி சுந்தரவடிவேலு அடிப்படைக் கல்நாட்டிய போது 'எஸ் எஸ் எல் சி படிப்பு வரை மாணவர்களுக்கு இலவசக் கல்வியும், இலவசப் பகல் உணவும் அளிக்கச்சென்னைஅரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. இத்திட்டத்தை உண்மையில் நடைமுறையில் கொண்டு வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன' என்று கூறினர்.

படித்தோம்!

மந்த்ரோபதேசம்:- திருப்பூவணம் வேதாந்தமடம் ஸ்ரீலஸ்ரீ காசிகாநந்த ஞாநாச்சாரியசுவாமிகளவர்கள் இயற்றியது. ஸ்ரீ பஞ்சாட்சரம், ஷடாட்சரம், அஷ்டாட்சரம், பிரணவம் ஆதிய மந்திரங்களைப்பற்றிய விளக்கம்இதிலுள்ளது. வடமொழி, பாரத நாட்டின் பொதுமொழியென்றும், மந்திரங்களெல்லாம் பாணிநி சூத்திரத்திற் கண்ட இலக்கணமுறைப்படிஅமைந்தன என்றும் சுருதி, யுக்தி, அநுபவங்களுக்குப் பொருந்த ஆசிரியர் இதில் தெளிவுபடுத்தியுள்ளார்கள். இதனை வெளியிடுவித்தவர்: குடியாத்தம் பு. கா.கங்காதரமுதலியார்

பஞ்சாயத்தாக மாற்றுக

தேவகோட்டை, நவ 1-

தேவகோட்டை நகர மன்றத் தனிக்கூட்டம் 31-10-55ம் தேதி தலைவர் திரு. சித. சுப்பிரமணியன் செட்டியார் தலைமையில் கூடி தேவகோட்டை நகர மன்றத்தை பஞ்சாயத்து சபையாக மாற்றும்படி ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேறியது.

மேற்படி தீர்மானம் பல நகர மன்ற உறுப்பினரின் மனுவின் பேரில் கூட்டத்தில் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இத்தீர்மானத்தை 17வது தொகுதி உறுப்பினர் திரு, எல் சீனிவாசஐயங்காரும் 2வது தொகுதி உறுப்பினர் திரு எஸ். இராமநாதனும் ஆதரித்துப் பேசினார்கள். அதில் இந்நகரம் பொருளாதார நிலையில் பலவீனமடைந்து கொண்டு வருவதாகவும் அதற்குச் சான்றாக சென்ற ஆணையாளரின் நிர்வாகக்குறிப்புகளிலிருந்து பல மேற்கோள்கள் காட்டி விளக்கமாகப் பேசினர்.

பின்னர் தீர்மானம் ஒருமனதாகநிறைவேறியது.

சப் இன்ஸ்பெக்டர்கள் மாற்றம்

திருப்பத்தூர் நவ 1-

இங்கு ஓராண்டாயிருந்து பொதுமக்கள் நலன் கருதி, சேவை செய்துமக்களிடமிருந்து நன்மதிப்பைப்பெற்ற சப் இன்சுபெக்டர் திரு பால்ராஜ் இராமநாதபுரம்மாவட்டத் தலைமைக் காரியாலயத்தின் உழவு இலாகா சப் இன்சுபெக்டராக மாற்றப்பெற்று, அவர்களுக்குப் பதிலாக ஜனாப் சேக்மீன் என்பவர் இங்கு பதவி ஏற்றுள்ளார். கீழச்சிவல்பட்டி அவுட்போஸ்ட் பொறுப்புள்ள போலீசு நிலையமாகி திருப்பத்தூர் சர்க்கிளுடன் சேர்ந்துள்ளது.

தொடர்கதை:

வாழ்க்கைப் பாதையில்...?

அழ. கருப்பையா

'மங்கை, காரில் ஏறிக்கொள். கல்லூரி சென்று கண்காட்சியைக் கண்டுவருவோம்' என்று கூறிப் பத்மினியைப் பார்த்தான். மங்கை வந்ததும் பத்மினி சென்றுவிட்டது அவனுக்குத் தெரியுமா?

மனோகரன் தன்னை நேசிப்பதாக நடித்துப் பத்மினியை மணக்க எண்ணுகிறான். என்ற எண்ணம் மங்கையின் இதயத்திலே படரத் தொடங்கியது. துடி இடை மங்கை அவனை நேசிக்க அவன்வேறொருத்தியை எண்ணுகிறான். கையில் வெண்ணெய் இருக்கும்பொழுது நெய்க்குஅலைவதா? கிராக்கியான பொருள்களின்மேல்தான் மனிதர்களுக்கு விருப்பம் ஏற்படுகிறது. வேண்டாமென்கிறாள் விரும்புகிறார்; வேண்டுமென்கிறேன். மறுக்கிறார் என்ற எண்ண அலைகளின் நடுவே வீற்றிருந்த மங்கைக்குக் கல்லூரி வந்துவிட்டது என்பதை அறிவித்துக் கல்லூரிக்குள் அழைத்துச்சென்றான். மனோகரும் மங்கையும் ஒவ்வொரு காட்சியாகக் கண்டு சேகர் நிற்குமிடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

மேஜைமீதிருந்த மனிதனின் எலும்புக் கூட்டைக்காட்டி, 'மார்பெலும்புகள் மனிதனுக்குக் கவசம் போன்றவை. எலும்புகளின் இயக்கம் மனிதனின் இயக்கத்திற்கு உறுதுணை செய்கிறது. எலும்புகள் வளர்ச்சி பெறுவிட்டால் மனிதன் மனிதனாக வாழமுடியாது. உடம்பின் முக்கியபாகம்-இரத்த ஓட்டத்திற்கு உதவுவது இருதயம். அந்த இருதயத்தைக் காப்பன மார்பெலும்புகளே' என்று விளக்கிவந்த சேகர் அங்குநின்று கொண்டிருக்கும் மனோகரைக் கண்டதும் தன் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டான். 'சேகர், உடற்கூறு படிக்கும் நீ பெண்களின் உள்ளக்கூற்றையும் அறிந்துகொள்ள வேண்டும்' என்று கூறிச் சிரித்தான் மனோகர். 'அதற்கு இதய ஓடையிலே அன்பு நீர் ததும்பவேண்டும். உடலுக்கு எலும்பு சிறந்தது

போல உயிருக்கு அன்பு சிறந்தது' என்று கூறிய சேகர் இடதுபக்கம் திரும்பினான். அங்கு நின்றுகொண்டிருந்த பத்மினியைக் கண்டதும் அவனுள்ளம் கும்மாளம் போட்டது. உதடுகளுக்கிடையே சிரிப்புத் தவழ்ந்தது.

பத்மினி-சேகர் சந்திப்பைக் கண்ட மனேகர் மங்கையோடு நழுவினான். சேகர் பத்மினியை அழைத்துக்கொண்டு விருந்தினர் அறைக்குச் சென்றான்.

21

காஷ்மீரில் ஏற்பட்ட புயலைப் பற்றிப் பக்கம்பக்கமாகப்பத்திரிகைகள் எழுதியிருந்தன. அந்தச் செய்தியை மிகக் கவனத்தோடு படித்துக்கொண்டிருந்தான் மனேகர். ஜன்னல் வழி புகுந்து அவன் கட்டிலில் தன் பொற்கதிர்களைப் பாய்ச்சினான் காலைக்கதிரவன். சமையல்காரன் கொண்டுவந்து வைத்த காலைக் காப்பியிலிருந்து ஆவி வந்து கொண்டிருந்தது. காப்பியையும் மறந்தவனாய்ப் பத்திரிகைச் செய்தியில் தன் கருத்தைச் செலுத்திக்கொண்டிருந்தான். கையில் குழந்தையோடு வந்து நின்ற கல்யாணியைக்கூடக் கவனிக்கவில்லை அவன். பொறுமை பெருமைதராது என்று எண்ணிய கல்யாணி; 'அத்தான்! பெற்றெடுத்துவிட்டேன் நம் செல்வத்தை. என்னை நீங்கள் காதல்ராணியாகவும் ஏற்றுக் கொள்ளவேண்டாம், மனைவியாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டாம். உங்களுக்குப் பணிசெய்யும் பாக்கியத்தையாவது தாருங்கள் எனக்கு. நான் வாழவிரும்பவில்லை; எனினும் குழந்தையின் புகழைக் காண வேண்டுமென்ற அவா என்னை வாழச் செய்கிறது. உங்கள் வேலைக்காரியாக என்னை ஏற்றுக்கொண்டால் பெருமையடைவேன்' என்று கண்ணீரால் அவன் பாதங்களை நனைத்தாள்.

கல்யாணியின் பேச்சைக் கேட்டு மனேகரன் திடுக்கிட்டான். சிறிதுநேரம் மௌனம் நிலவியது. காபியில் கொஞ்சம் குடித்தான். அது ஆறிப்போயிருந்ததால் வாயைக் கொப்பளித்துத் துப்பிவிட்டுச் சிகரெட்டைப்பற்றவைத்தான்.

ஆசிரியர் பாலகவி இராமநாதன் செட்டியாரால் தேவகோட்டை செட்டிநாடுஅச்சகத்தில் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.